பக்கங்கள்: பத்து
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
Registered as a News paper in Sri Lanka

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

# வலம்புரி

VALAMPURI
விலை ரூபா.7.00
சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 தை 13 செவ்வாய்க்கிழமை (27-01-2004) தொலைபேசி - 2223378 ஒலி 39

# தெற்கு அரசியல் நிலைமை மாறுகிறது
# அதிகார இழுபறிக்கு முடிவுகாண
# ஜனாதிபதியும் பிரதமரும் முயற்சி!

## அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தகவல்





(நமது நிருபர்)

முக்கிய மூன்று அமைச்சுக்களின் பொறுப்புக்களை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தன்வசமாக்கிக் கொண்டதை அடுத்து அவருக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள அரசியல் இழுபறி நிலையை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு, இருதரப்பினருக்குமிடையிலான அதிகாரிகள் மட்டப் பேச்சுவார்த்தைகளில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றம் கண்டுள்ளதாக செய்தியாளர் மாநாட்டில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அச் செய்தியாளர் மாநாட்டில் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அடுத்த மாதம் 17ஆம் திகதி வாஷிங்டனில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் பங்கு பற்றும் கூட்டம் நடைபெற விருப்பதால் அதற்கு முன்பாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையிலான அரசியல் இழுபறிநிலையை முடிவுக்குக் கொண்டுவரும் பாரிய

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியின் சத்தியப்பிரமாணம் குறித்து
## விளக்கமளிக்குமாறு கோரிய மனுவை
## உயர் நீதிமன்றம் நிராகரித்தது

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா மூன்று தடவைகள் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டதற்கான சட்ட வாக்கத் தன்மை பற்றி விளக்கம் அளிக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சட்டத்தரணி தனுதாஸ கோமஸ் தாக்கல் செய்த மனுவில் அரசியல் யாப்பின் 125 ஆவது சரத்தின் கீழ் இதற்கான விளக்கத்தை அளிக்குமாறு கோரியிருந்தார். சட்டப் பிரகாரம் அவ்வாறான விளக்கத்தை சட்டவாக்க நீதிமன்றம் அல்லது சட்டமன்றம் மாத்திரமே கோரமுடியும். இதனால் மனுதாரர் தாக்கல் செய்த மனுவுக்கு விளக்க த்தை அளிக்க முடியாது என உயர் நீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரி வித்துள்ளது.

(10ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேத் தூதுவர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம்

(மட்டக்களப்பு)

நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிராஸ்கர் நேற்று மட்டக்களப்புக்கு விஜயம் செய்தார்.

நோர்வேயின் நிதியுதவியுடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம் பெறும் புனர்நிர்மாணப் பணிகளைத் தூதுவர் பார்வையிட்டார்.

80 மில்லியன் ரூபா செலவில் 17 பாடசாலைகளும், 350 மில்லியன் ரூபா செலவில் வீதிப் புனரமைப்பும் அங்கு இடம் பெறுகின்றது. அவற்றைப் பார்வையிட்ட தூதுவர் மட்டக்களப்பு அரச செயலகத்தில் மட்டு. மாவட்ட நிலைமை பற்றியும் அரச அதிப்ருடன் கலந்துரையாடினார்.

ஆரையம்பதி, காத்தான்குடி, ஏறாவூர் ஆகிய இடங்களில் உள்ள பாடசாலைகளுக்குச் சென்ற அவர் அங்கு உரையாற்றுகையில், இலங்கையின் அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காண நோர்வே அனுசரணையாளராகச் செயற்படுவதை அரசும் விடுதலைப் புலிகளும் விரும்புகின்ற வரை அப்பணியை நோர்வே ஆற்றுமென்றும் குறிப்பிட்டார்.

(இ)

## புலிகள்-இராணுவம் இன்று திருகோணமலையில் சந்திப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப் புலிகளிற்கும் இராணுவத்தினருக்குமிடையிலான சந்திப்பொன்று இன்று திருகோணமலையில் நடைபெறவுள்ளது.

கட்டைபறிச்சானில் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் மேற்பார்வையில் இச் சந்திப்பு இடம் பெறவுள்ளது. இச் சந்திப்பில் விடுதலைப் புலிகளின் சார்பில் திருகோணமலை மாவட்டக் கட்டளைத் தளபதி கேணல் பதுமன் தலைமையிலான குழுவினரும், இராணுவத்தினர் சார்பில், திருகோணமலை மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தெனனக்கோன் தலைமையிலான குழுவினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

திருமலை மாவட்டத்தின் இயல்பு நிலைமை மற்றும் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்படவுள்ளது.

(ச)

## இனங்களின் திருப்திக்கமைய

## ஸ்ரீ.சு.கட்சி—ஜே.வி.பி கூட்டு

# இனங்களின் திருப்திக்கமைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு

## நிருபன் சென் ஆலோசனை

(கொழும்பு)

இலங்கையிலுள்ள சகல இனங்களையும் திருப்திப்படுத்தும் வகையிலும் ஜனநாயகத்தையும் உறுதிப்படுத்தும் வகையிலும் இனப்பிரச்சினைக்கான தீர்வு அமைய வேண்டும் என இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் நிருபன் சென் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 55 ஆவது குடியரசுத் தினத்தை முன்னிட்டு, கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்:

இலங்கையின் இறைமை தொடர்ந்தும் பாதுகாக்கப்பட வேண்டும்
(10ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ.சு.கட்சி – ஜே.வி.பி கூட்டு

# அரசியல் யாப்பை வரையறுப்பதில் கருத்து முரண்பாடு; இழுபறிநிலை

(கொழும்பு)

மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியின் புதிய அரசியல் யாப்பினை வரையறை செய்வதில் பல இழுபறிகள் தோன்றியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இக்கட்சியின் முக்கிய பதவிகளைப் பகிர்ந்து கொள்வதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளைத் தொடர்ந்தே இவ் இழுபறிநிலை தோன்றியுள்ளது. கடந்த 20ஆம் திகதி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஜே.வி.பி.க்குமிடையே கூட்டமைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இத்தினத்திலேயே இவ் யாப்பு வரையறையைச் செய்வதெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் சில காரணங்களால் அது பிற்போடப்பட்டது.

பின்னர் ஜனாதிபதி மாளிகையில் ஏற்பாடாகியிருந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இவ்யாப்பினை வரையறை செய்து இருதரப்பும் கைச்சாத்திடுவது எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. ஆனால் அதுவும் இறுதியில் பிற்போடப்பட்டது.

இவ்யாப்பு வரையறையில் இழுபறி நிலை ஏற்படுவதற்கு கட்சியின் பொதுச் செயலர் பதவியை வகிப்பதில் மங்களசமர வீர, அனுரா பண்டாரநாயக்க, மைத்திரிபால சிறிசேன ஆகிய சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களிடையே ஏற்பட்டுள்ள போட்டியே காரணமெனத்தெரியவரு
(10ஆம் பக்கம் பார்க்க)

# வட – கிழக்கு மக்களுக்கு பிரச்சினைகள் உள்ளதை நாடு ஏற்றுக்கொள்கிறது!

## உண்மையைக் கக்குகிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சிகளுக்கு சகல தரப்பினரும் இணக்கப்பாட்டுடன் செயற்பட முன்வர வேண்டும்.

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலுள்ள மக்களுக்குப் பிரச்சினைகள் உள்ளன என்பதை நாடு முழுவதும் ஏற்றுக் கொண்டுள்ளது. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிகாரப் பகிர்வு அவசியம் என்பதைப் பிரதான அரசியல் கட்சிகளும் குழுக்களும் ஏற்றுக் கொண்டுள்ளன.

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரியில் சப்பிரகமுவ மாகாண சபையின் புதிய அலுவலக கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாகாண சபைகள் மூலம் வடக்குக் கிழக்கு மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான சூழல் ஏற்படுத்தப்படுவது அவசியமாகும். சுதந்திரமான வாக்களிப்பு மூலம் வடக்குக் கிழக்கு மக்களின் தமது பிரதி
(10ஆம் பக்கம் பார்க்க)

# நேற்று முதல் சுகாதார ஊழியர் உண்ணா விரதத்தில் குதிப்பு

(கொழும்பு)

சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பைச் சேர்ந்த அங்கத்தவர்கள் நேற்று நண்பகல் முதல் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளார்கள்.

கொழும்பில் உள்ள சுகாதார அமைச்சுக்குமுன்பாக ஆரம்பிக்கப்பட்ட இப்போராட்டம் குறித்து சுகாதார சேவைகள் தொழிற்சங்க கூட்டமைப்பின் அமைப்பாளர் சுமன் இரத்தினப்பிரிய கருத்து தெரிவிக்கையில்;

சம்பள முரண்பாடுகளுக்குத் தீர்வுகாணவென பிரதமரின் பணிப்பின் பேரில் நியமிக்கப்பட்ட அமைச்சரவை உபகுழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது.

ஏனெனில் சம்பள அதிகரிப்பின் 50 சதவீதம் இவ்வருடத்திலும்
(10ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அன்றாட வாழ்வுடன் ஒன்றிப்போன

# மூலிகைத் தாவரங்களின் பயன்பாடுகள்

பண்டைய காலம் முதல் தற்காலம் வரை மூலிகைத் தாவரங்கள் மனிதனின் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கின்றன. இவை மலிவாகவும், பக்க விளைவுகளை ஏற்படுத்தாமலும் நிரந்தர குணமடைந்து நாம் நோயற்ற வாழ்வு வாழ வழிசெய்கின்றன.

பல்வேறு வகையான மூலிகைத் தாவரங்களில் மிகவும் முக்கியமானதும், எளிதில்கிடைக்கக் கூடியதுமான வேம்பு, நெல்லி, வல்லாரை, கீழாநெல்லி, ஊமத்தை போன்றவைகள் மருத்துவத்துறையில் பெரும் பங்கு வகிக்கின்றன.

### குடல்புழுக்கள் மற்றும் கருத்தடைக்கு

தமிழர்களின் வாழ்வோடு ஒன்றிப்போன மரங்களுள் ஒன்று வேம்பு, வேம்பு என்றாலே "கசப்பு" சுவைதான் நம் நினைவுக்கு வரும். ஆனால் வேப்பமரத்திலிருந்து கிடைக்கும் பல்வேறு பொருட்கள் மனிதனுக்கு எல்லா வகையிலும் பயன்படுகின்றன.

வேம்பில் 30 இற்கும் மேற்பட்ட இரசாயனப் பொருட்கள் அடங்கியுள்ளன. பைரோனிலின் என்ற இரசாயனப் பொருள் ரொக்கெற்றுக்கான உந்து விசை மற்றும் மாற்றுப் பொருளாகவும், "நீம்ரிச்" பயிர்களைத்தாக்கும் பூச்சி, நோய் மற்றும் நூற் புழுக்களை அழிக்கும் மருந்தாகவும், ''சோடியம் நிம்பினேட்'' என்ற வேதிப் பொருள் விந்தணுக்களின் வேகத்தைக் குறைத்துத் தற்காலிகக் கருத்தடைச் சாதனமாகவும் பயன்படுகின்றது.

வேப்பங் கொழுந்தில் விற்றமின் ''ஏ'' உள்ளது. வேப்பங் கொழுந்தை உலர்த்திப் பொடி செய்து தேனுடன் கலந்து தொடர்ந்து 6 மாதங்களுக்கு உட்கொண்டால் தலைமுடி நரைக்காமல் கறுப்பாக வளரும். வேப்பெண்ணெய் குடல் புழுக்களை அழித்து, இரத்தத்தைச் சுத்தப்படுத்துகின்றது.

வேப்பங்குச்சியைப் பயன்படுத்தினால் ''பயோரியா'' என்ற பல்நோயைக் கட்டுப்படுத்தலாம். ஆறாத புண்கள், காதில் ஏற்படும் புண், வலி, சீழ் வடிதல் போன்றவைகளுக்கும் வேப்பெண்ணையைப் பயன்படுத்தலாம்.

## மருத்துவ விளக்கம்

### நரைதிரைமூப்பிலிருந்து விடுபட

இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு என முச்சுவைகளை உள்ளடக்கியது நெல்லி. இது அதிக நார்ச்சத்துக்களைக் கொண்டுள்ளது. நெல்லியில் அதிக அளவு விற்றமின் "சி" காணப்படுவதால் இதனை விற்றமின்சியின் ராஜா (**King of Vitamin C**) என அழைப்பர்.

இந்த விற்றமின் சி உடலில் ஏற்படும் தனித்தனி அயனிகளை அழித்து நமது உடலை நரை, திரை மூப்பு முதலியவற்றிலிருந்து மீட்டு என்றும் இளமையாக வைத்திருக்க உதவுகின்றது.

வயிற்றில் ஏற்படும் அமிலத் தன்மையைக் குறைத்து வயிற்றுப் புண் ஏற்படாமல் தடுக்கின்றது. நெல்லிச் சாற்றுடன் எலுமிச்சஞ் சாற்றைக் கலந்து உட் கொண்டால் பேதி நிற்கும். நெல்லி விதையின் மூலம் அஸ்துமா, மூச்சுக் குழல் அழற்சி போன்றவை குணமாகும். விற்றமின் சி குறைவினால் ஏற்படும் ஸ்கேவி என்ற நோயைச் சரி செய்கின்றது.

### வலிமையும் வல்லமையும் பெற

வல்லாரை மிகவும் சக்தி வாய்ந்த மூலிகையாகும். இதனுடைய அனைத்துப் பாகங்களும் மருத்துவத் துறையில பயனபடுத்தப்படுகின்றன. இதனுடைய இலைகள் பல்வேறு சுவைகளை உடையதால் பித்தம், கபம் முதலியவற்றைச் சமப்படுத்தி உடலைச் சீராக வைத்திருக்க உதவுகின்றது.

மேலும், வல்லாரை மூளையைப் பலப்படுத்தி நினைவாற்றலை வளர்க்கும் மூலிகையாகப் பயன்படுகின்றது. இரத்தத்தில் உண்டாகும் நச்சுக்களை அழித்து இரத்தத்தைத் தூய்மைப்படுத்தவும் நரம்பு, தோல் சம்பந்தமாக ஏற்படும் நோய்களைத் தடுக்கவும் வல்லாரை பயன்படுகின்றது. இதனால் உடல் நலத்தையும், மனித ஆற்றலையும் பெருக்கி எம்மை வலிமையுள்ளவர்களாகவும், வல்லமை உள்ளவர்களாகவும் வாழ வழி செய்யும்.

### உயிர்க் கொல்லி நோய்களை அழிக்க

அனைத்து இடங்களிலும், பல்வேறு வகையான தட்ப வெப்ப நிலைகளிலும் வளரக் கூடியது கிழா நெல்லித் தாவரமாகும்.

24 வகையான கீழா நெல்லிகளில் 8 வகையான கீழா நெல்லிகள் மரத்துவத்துறைக்கெனப் பயன்படுத்தப்படுகின்றது. இது மஞ்சள் காமாலையைக் குணப்படுத்த உதவும்.

இந்த நவீன காலத்தில் மனிதனுக்குச் சவாலாக உள்ள கொடிய உயிர் கொல்லி நோய்களான ஹெபடைடிஸ் பி மஞ்சள் காமாலையையும், எயிட்ஸ் வைரஸ் கிருமிகளையும் அழிக்கும் திறன் படைத்தவை கீழா நெல்லியாகும்.

### ஆஸ்துமா மற்றும் நாய்க் கடிக்கு

ஊமத்தை சித்த மருத்துவத் துறையில் சிறந்த பங்கினை வகிக்கின்றது. இதிலிருந்து கிடைக்கக் கூடிய பூ, காய், விதை முதலிய அனைத்துப் பகுதிகளும் மருத்துவத்துறையில் பயன்படுகின்றது.

ஊமத்தை இலைச் சாற்றுடன் தேங்காய் எண்ணெய் கலந்து செய்யப்படும் மத்தன் எண்ணெய் காது வலி, காதில் சீழ் வடிதல் போன்றவற்றைக் குணப்படுத்தும்,

**கே. கார்த்திகேயன்**
**M.B.B.S**

இவற்றின் இலை, பூ, போன்றவற்றை நீரில் போட்டுக் கொதிக்க வைத்து அதனால் ஏற்படும் வாயுவைச் சுவாசித்தால் ஆஸ்துமாவைக் கட்டுப்படுத்தலாம்.

ஊமதநதை இலைகளை வதக்கி வீக்கம் உள்ள இடங்களில் தடவினால் வீக்கம் குறையும். குழந்தைகளுக்கு ஊரல் ஏற்படும் போது முழங்காலுக்குக் கீழே இதைத் தடவினால் ஊரல் குறையும். நாய்க்கடிக்குச் சிறந்த மருந்தாகவும் ஊமத்தை பயன்படுகின்றது. □

## தினசரி விமானசேவை

(கொழும்பு)

கொங்கொங்- கொழும்பு இடையிலான தினசரி விமானசேவைகளை எதிர்வரும் மார்ச் மாதம் முதல் நடத்த முடியுமென ரஷ்ய பசுபிக் விமான நிறுவனத்தின் முகாமையாளர் றொனால்ட் றாம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான தினசரி விமான சேவைகளை நடத்துவதன் மூலம் அதிக எண்ணிக்கையான சீன சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கைக்கு வருவார்கள் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (தி-60,10)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் 306 - ஏ மாவட்டத்தின் ஏற்பாட்டில், நிபுணத்துவம் மிக்க மருத்துவர்கள் பங்குபற்றும் மருத்துவ முகாம ஒன்று எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை தென்மராட்சி, தீவகப் பிரதேசங்களில் நடைபெறவுளஎன.

யாழ். மாவட்ட லயன்ஸ் கழ்கத தின் 306 -பி கழக அனுசரணையுடன் நடைபெறவுள்ள இம் மருத்துவ முகாமின் போது நோயாளர்களுக்கு இலவச மருந்துவகைகளை வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இந்த மருத்துவமுகாமில் கொழும்பில் இயங்கிவரும் அப்பலோ வைத்தியசாலையில் பணியாற்றிவரும் 10 இந்திய மருத்துவ நிபுணர்கள் பங்கேற்க ஏற்பாடு செய்யப்பட்ட போதிலும், கொழும்பில் உள்ள இலங்கை மருத்துவர்கள் சங்கம் இறுதி நேரத்தில் காட்டிய கடும் ஆட்சேபனை, எதிர்ப்பு நடவடிக்கைகள் காரணமாக வைத்திய நிபுணர்களின் வருகை தடைபபட்டுள்ளது.

ஆனாலும், நிபுணத்துவம் மிக்க மருத்துவர்களின் பங்களிப்புடன் இம் மருத்துவமுகாம் திட்டமிட்டபடி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தென்மராட்சிப் பிரதேசத்துக்கான இம் மருத்துவ முகாம் வரணி மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (தி-16)

# இலங்கைக்கு நிதி உதவி வழங்குவதில் எந்த நாடும் பின்வாங்கவில்லை

## ஜப்பானின் விசேட தூதுவர் யசூசிஅகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவியளிக்கப்படும் என்ற உறுதி மொழியில் இருந்து எந்தவொரு உதவி வழங்கும் நாடும் பின்வாங்கப் போவதில்லையென யப்பானின் விசேட தூதுவர் யசூசி அகாஷி தெரிவித்தார்.

கடந்த வெள்ளி அன்று கொழும்பில் நடத்தப்பட்ட இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் நாடுகளின் மாநாடு தொடர்பாக நேற்று முன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் தமது கடைப்பாட்டை பூரணமாக நிறைவேற்றும்.ஆனால் ஜனாதிபதியும் பிரதமரும் தமக்கிடையிலான கருத்து முரண்பாடுகளை கூடிய விரைவில் தீர்த்துக் கொள்ளவேண்டும் என உலக நாடுகள் விரும்புகின்றன.

இரு தலைவர்களுடனும் நடத்திய பேச்சுக்களில் அவர்கள் சமரசத் தீர்வு ஒன்றுக்கு வருவதில் அக்கறை உடையவர்களாக இருப்பது தெரிகிறது.

மேலும், அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை தடைப்பட்டுள்ள போதிலும், நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கான முயற்சிகளில் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்ற யுத்த நிறுத்த ஒப்பந்தம் இடையூறு இன்றிப் பேணப்படுகிறது.

ஸ்ரீ.சு.கட்சி - ஜே.வி.பி கூட்டு சமாதானத்தை ஏற்படுத்துவதில் முன்னேற்றகரமாகச் செயற்படுகின்றது.

இதேவேளை, உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் சிறுவர்களைப் படைக்குச் சேர்த்துக் கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டது.

அத்துடன் சமாதான நடைமுறைகளைப் பேணுவது தொடர்பாக புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்செல்வன் உறுதியளித்திருக்கிறார் எனக் குறிப்பிட்டுள்ளார். (த)

## வலுவிழந்தோர் விபரம் திரட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்திலுள்ள அனைத்துப் பிரதேச செயலர் பிரிவுகளிலும் வாழ்ந்துவரும் வலுவிழந்தோர் பற்றிய விபரங்களைத் திரட்டும் பணிகளை யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆரம்பிக்கவுள்ளது.

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப் படவுள்ள இவ் விபரம் திரட்டும் பணிகளில், உளளூர் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளவுள்ளதாக நிதியத்தின் தலைவர் வி.சிறீ சக்திவேல் தெரிவித்துள்ளார். (தி-16)

## வழக்கு விசாரணைகளை சிறைச்சாலைகளில் நடத்துவது மிகவும் சிரமமான காரியம்

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

சிறைச்சாலைகளில் வழக்கு விசாரணைகளை தினமும் நடத்துவது என்பது நடைமுறையில் இயலாத காரியம் என பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தம்மிக்க அமரசிங்கவின் கொலைச் சம்பவத்தால் ஏற்பட்ட பாதுகாப்பு நிலைமையைக் கருத்தில் கொண்டு, சிறைச்சாலைகளிலேயே வழக்கு விசாரணை களை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

ஆயினும், நாளாந்தம் வழக்கு விசாரணைகளை சிறைச்சாலைகளில் நடத்துவது மிகவும் சிக்கலாகவுள்ளது.

இதனால் நீதிமன்றங்களின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுத் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதே இதற்கான ஒரேவழி என்று பிரதம நீதியரசர் சரத் என் சில்வா மேலும் தெரிவித்தார். (தி -60,10)

## வடக்குக் கிழக்கில் நிலவும் வைத்தியர் பற்றாக்குறையைப் போக்க சுகாதார அமைச்சர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஆயிரத்து 900 வைத்திய சேவை ஊழியர் வெற்றிடங்கள் நிலவுவதாக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் குமார வேற்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

இம் மார்காணத்தில் காணப்படும் வைத்தியசாலைகளில் 300 வைத்தியர்களுக்கான வெற்றிடங்களும், 100 வைத்திய நிபுணர்களுக்கான வெற்றிடங்களும் காணப்படுவதுடன், ஆயிரம் தாதிமார்களுக்கும் 500 மருத்துவ மாதர்களுக்கும் வெற்றிடங்கள் நிலவுகின்றன.

இதனால், இம் மாகாணத்தில் வைத்திய சேவையைத் திருப்திகரமாக வழங்குவதில் பல சிக்கலகள் எதிர்நோக்கப்படுகின்றன.

இதேவேளை, வடக்கு கிழக்கு மாகாணத்தில் நிலவும் இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு 185 வைத்தியர்களை வடக்கு கிழக்கு வைத்திய சாலைகளில் பணியாற்ற தாம் அனுப்பி வைத்திருப்பதாக சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண தெரிவித்துள்ளார்.

மேலும், இம் மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளுக்குத் தேவையான வைத்திய மற்றும் தாதி ஊழியர்களை அனுப்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-4)

# 2004 புத்தாண்டுப் பலன்

**2004ஆம் ஆண்டில் பன்னிரு ராசிகளுக்கும் ஜனவரி தொடக்கம் டிசம்பர் வரையான பன்னிரு மாத பலன்கள் தனித் தனியாகக் கணிக்கப்பட்டு இங்கு தரப்படுகிறது. பன்னிரு ராசிகளுக்குமான நவம்பர் மாதப் பலன்களின் தொடர்ச்சி.**

## கும்பம்



**அவிட்டம் 3,4வது பாதங்கள்-சதயம் 4பாதங்கள்-பூரட்டாதி 1,2,3 பாதங்கள் வரை 9 பாதங்கள்.**

இந்த மாத ஆரம்பத்தில் அட்டமத்தில் குரு,சுக்கிரன் நீசம் செவ்வாயும், அட்டமத்திலிருக்க ஒன்பதில் கேது, சூரியன் உறவினர் வருகை குடும்பத்தில் சுபச்செலவுகளை உண்டாக்கும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு விருப்பம் இல்லாத கடிதம் வருவது,இலாகா மாற்றல் உத்தரவைப் பெறுவது போன்றவைகள் இருக்கும். குழந்தைகள் ஆரோக்கிய வகையில் சிறுசிறு பாதிப்பு மருத்துவ செலவுகளும் இருக்கும்.பெண்களுக்கு இப்போது வந்திருப்பது புது இடம் தான். சில வகையில் மனத்திருப்தி இல்லாமல் இருக்கின்றன என்றாலும் உடன் இருப்பவரை இதமாகச் சரிக் கட்டிப்போக வேண்டும். மேல்மட்ட மனிதர்கள் முதல் கீழ்மட்ட மனிதர்கள் வரை இப்பேது உங்கள் குணாதிசயங்களைப் பாராட்டுபவராக இருப்பர். பழைய சிக்கல்கள் கடன் வகைகளும் கூட கட்டுப்பட்டுத்தான் இருக்கிறது. புதிய ஒப்பந்தத்தை பெறுவது தன ஆதாயமும் குறிப்பிடத்தக்கது. உங்கள் ஆரோக்கியம் நன்றாகவே இருக்கின்றது. வெளியூர் பிரயாணம் எதிர்பாராமல் தடைப்பட்டாலும் காரிய சாதனைக்குக்குறைவு இல்லை. நன்மைகள் கிடைக்க சற்று தாமதமும் பணவிஷயத்தில் தட்டுப்பாடும் இருந்து கொண்டோ இருக்கும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வகை ஆதாயம் இருக்கிறது. பழைய நண்பர்களை சந்திப்பது புது தகவலைக்கொடுக்கும். அரசாங்கம் அரசியல் வழியினர் உங்கள் அருகில் இருந்து நன்மை புரிவர். நடுப்பகுதிக்குமேல் தனவரவு எதிர்பார்த்த கடிதமூலம் திருப்தியான செய்தியும் வந்து சேரும் குடும்ப உறவினர் வகையிலும் அமைதியான போக்கும் நிலவி வரும். தொழில்கூட்டு மனிதர் களிடமும் இப்படியே. சிலர் அந்நிய நாட்டு பிரயாணத்தை மேற்கொள்ள அவசர முயற்சி உடையவர்களாக இருப்பர். எல்லா வகைக்கும் கௌரவப் பிரச்சினை தான் முன்னிற்கும். கணவன் ,மனைவி உறவு படிப்படியே நன்றாக இருக்கும். மாணவ மாணவிகளுக்கு நல்ல காலம் அல்ல என்பதால் தேர்வுக்கு கவனித்து படிக்கவேண்டும். போட்டி பந்தயம் அனுகூலம் ஏற்படும். அரசாங்க காரியங்களில் அனுகூலம் ஏற்படும். அரசியல் மனிதர்கள் அரசாங்க அதிகாரிகள் அனுகூலமிக்கவர்களாக தென்படுகிறார்கள். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்வது நல்லது. செய்தொழிலில் சில பெண்கள் குறுக்கீட்டால் குதர்க்க நிலை ஏற்படலாம். எச்சரிக்கை தேவை. முடிவு எடுப்பது உங்களின் எண்ணப்படியே இருப்பது நல்லது. மேலும் வீடு மனை சம்பந்தப்பட்ட விஷயங்களில் பிரச்சினைகள் ஏற்படலாம். முடிவு இவர்களுக்கு வெற்றியே. தாயுடன் கருத்து வேறுபாடு ஏற்படலாம். உறவினர் வீட்டிற்குச் செல்வதை அடுத்து இனி முதல் தொடங்கலாம். கடின உழைப்பினால் தான் கணிசமான தொகையும் கைக்கு வந்து சேரும். மகிழ்ச்சியே தொழில சம்பந்தமான பிரச்சினைகளில் உங்கள் போக்கு மற்றவர்களால் பாராட்டு பெறக்கூடியதே.

## மீனம்



**பூரட்டாதி 4வது பாதம் - உத்தரட்டாதி 4 பாதங்கள்-ரேவதி 4 பாதங்கள் வரை-9பாதங்கள**

எழுத்தாளர்கள் பிரிவைச் சார்ந்தவர்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கப் பெறும். மாணவ மாணவிகளுக்கு கல்வி தரம் உயர்வு, புது நட்பு மகிழ்ச்சிக்குரிய சில வேறு விஷயங்களும் இடம்பெறும். கவர்ச்சியான கடிதங்களும் கிடைக்கப்பெறுவீர்கள். உத்தியோகப் பிரிவு ஆண்,பெண்களுக்கு இடமாறுதல் இல்லை என்றாலும் இலாகா மாற்றம் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் நன்றாக இருக்கின்றன. வெளியூர் பிரயாணம் அடிக்கடி இருக்கும். சத்ருக்கள் நேர்முக வழி உங்களை ஒன்றும் செய்யாது. கண்ணியம் உடையவர்களாக இருப்பீர்கள். கொடுக்கல் வாங்கலில் புதிய திருப்பத்தை பெறலாம். வரவேண்டிய பணம் சற்று காலம் கடந்து வந் தாலும் நல்ல நேரத்திற்கு பயன் படுவதாக இருக்கும், போட்டி விளையாட்டு நிகழ்ச்சிகள் திருப்தியளிக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. எப்படி இருந்தாலும் பிரயாணச் செலவு, கௌரவச்செலவு உங்களை விடாது. உத்தியோகப்பிரிவு மனிதர்களுக்கு பதவியில் மாற்றம், பிறரால் பாராட்டு,இடமாறுதல் உண்டு. சிலருக்கு திருமணம் போன்ற சுபம் ஏற்றலும் உண்டாகும். புதுஉடை, விருந்தும் கிட்டும். கண்விழித்தல் அடிக்கடி இருக்கும். மேல் மட்டமனிதர்கள் மிகவும நல்ல சூழநிலையில் இருக்கின்றனர். குடும்ப மேன்மை உண்டு. புதுக்கணக்குப்போடுதலும் ஒப்பந்த நன்மையும் இப்போது இடம்பெறும். சகோதர சகோதரிகள் ஒத்துழைப்பு குடும்ப சொத்துவக்கயில் மற்றங்கள் செய்ய உதவியாக இருக்கும். உங்கள் முன்னேற்றத்தில் நண்பர்களும் பங்கு கொள்வது போன்ற நன்மைகளும் இருக்கின்றன. சனி பலம் பெற்று பங்கு இடமாற்றம் கொள்வது போன்ற பெரியதாக எண்ணுவ தெல்லாம் சிறியதாகிவிடும். உங்கள் வார்த்தையைக் கேட்டகாதவர்களாக இருந்தவர்கள் எல்லோரும் இப்போது வார்த்தைக்கு கட்டுப்பட்டவர்களாகஇருப்பர். அரசாங்க மூலமான பலன்கள் எதிர்பாராத நாட்களில் வந்து கிடைக்கும். இப்போது பிரயாணம் ஏற்பதுமட்டுமல்ல ஆரோக்கியம் சீதளத்தால் பாதிக்கப்படும். அதையும் கவனிக்கவேண்டும். உறவினர்கள் நண்பர்களாலும் பாராட்டப்பெறுவீர். நல்ல கனவுகள் தோன்றும். தொழில் சம்பந்தமான வகையில் இருந்து வந்த வழக்கு இதர சிக்கல்களையும் ஒரு நல்ல முடிவுக்கு கொண்டுவரும் காலம் இது. கிரகங்களின் சாரபலம் உங்களுக்கு அனுகூலமாக இருப்பதால் நன்மை. உத்தியோகப்பிரிவு மனிதர்களுக்கும் பதவிஉயர்வு இல்லை என்றாலும் பகுதி மாற்றம் முக்கியமாகும். குழந்தைகள் முன்னேற்றம் மகிழ்ச்சியாகவே இருக்கும். கொடுக்கல் வாங்கலில் பெருத்த முன்னேற்றம் விடுவீர்கள். போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகள் பிரகாசமாக இருக்கின்றன. அரசியல் அல்லது அரசாங்க உயர்மட்ட மனிதர்களின் சந்திப்பு உங்கள் செய்தொழில் வகைக்கு அனுகூலத்தை உண்டாக்கும். கடன் வழக்கு தள்ளிப் போகும். கவலையின்றி செயற்படுங்கள். குழந்தைகள் வகை மருத்துவ செலவும் இருக்கின்றது. சுபச்செலவுகளும் இருக்கின்றன. தூரத்து கடிதச் செய்தி மட்டும் சலனத்தை உண்டாக்கும் இது குறித்து ஏற்படும் மனச்சலனத்தை அறவே போக்கி விடவேண்டும். காரணம் தற்போது நடைமுறையில் உள்ள நன்மைகள் பாதிக்கக்கூடும். நாகரிக வாகனச் செலவு வழக்குசெலவும் கூட இருக்கத்தான் செய்யும். நண்பர்கள் போக்கு நன்மையாகவே இருக்கிறது. குடும்ப விஷயங்களும் நன்மையாகவே இருக்கும். போட்டி, பந்தயம் வேண்டாம். புகழ்ச்சிக்காக செலவிடுவதைத் தவிர்க்கவும். கணவன் மனைவிக்குள் அடிக்கடி கருத்துவேற்றுமை காணப்படும் அதிக அலைச்சல் சரியான தூக்கமின்மை காரணமாக உடல், இதய நோய் இருக்கும். தகுந்த ஓய்வு தேவை. போட்டி பந்தயங்களில் ஈடுபாடு

# உங்களுக்கு எப்படி?

காணலாம்.நீங்கள் குடும்பத்தில் எதிர்பார்த்தவை உங்களுக்கு அப்பாற்பட்ட விஷயமாக போய்விடாது. அருகில் வந்துவிட்டது. சிலருக்கு பூமிப்பொருள் வீடு சித்தியும் உண்டாகும்.

**பன்னிரு ராசிகளுக்குமான டிசம்பர் மாதப்பலன்கள்**


## மேடம்



**அச்சுவினி 4 பாதங்கள்-பரணி 4 பாதங்கள். கார்த்திகை முதல் பாதம் வரை-9 பாதங்கள்.**

இந்தவருடம் முடிந்துவிட்டது. குரு 6ல் மறைவு 8ல் மறைந்த கிரகங்கள் சூரியன், புதன்,சுக்கிரனும் வழக்கு கடன் விஷயங்களை பாதிக்கும் முக்கிய கடிதம் எதிர்பார்ப்பது வந்து சேரும். அயல் நாட்டு தொடர்பு உள்ளவர்களுக்கு அவசர பிரச்சினைகள் சில முடிவாகும். உத்தியோகப்பிரிவு, ஆண், பெண்களுக்கு இடமாறுதல் இருக்குமே தவிர உயர்வு இல்லை. நண்பர்களுக்கு உபகாரம் புரியும் காலம் இது. கல்யாணம் காதலில் வெற்றியிருக்கிறது. எல்லாம் நல்லவையே. எடுத்த முயற்சியில் கிரகத்தைக் குறையாமல் இருக்கவேண்டும். குரு தற்காலிகமானவனே. செவ்வாய் நன்மை இல்லை என்றாலும் கொடுமையைக் குறைக்க குரு இருப்பதால் விபத்தில் இருந்து தப்பி விடுவீர்கள். குடும்பப்பிரச்சினைகள் சிறிது முன் இருந்தும் குறித்தபடி முடிக்க பணம் வந்து சேர்ந்து விடும். ராகு இப்போது தீயவனல்ல. யோக கிரகத்தின் சாரத்தில் இருப்பதால் புதுத்தொழில் முயற்சி தனவரவு கூட்டு மனிதர்கள் சேர்க்கை போன்றவையும் உண்டாகும். உங்கள் நெருங்கிய நண்பர்களுக்கு நீங்கள் உதவியாக இருப்பீர்கள். பூமி,வீடு போன்ற பொருள் விற்கவும் வாங்கவும் உங்களால் பெரிய நன்மை அவர்களுக்கு இருக்கிறது. தாய்வழி உறவில் கருமச்செலவும் உண்டாகும். புத்திரர் கல்வி குறையும். புத்திரியர் கல்வி உயரும். இலாகா மாற்றம் தவிர்கமுடியாதது. நண்பர்கள் சிலரை சந்திப்பது நல்ல ஆலோசனைக்கு வழிவகுக்கும. குடும்ப வகைக்கு நாகரிகப் பொருள் சேர்க்கையும் உண்டாகும். வழக்கு கடன் பிரச்சினைகளும் கட்டுப்பட்டுத்தான் இருக்கும். சத்ருக்கள் பலம் படிப்படியே குறைந்துவருவதாக இருக்கிறது. குடும்ப உறவில் நடக்கும் சுப விஷயங்களில் கலந்துகொள்வது விருந்துண்பது போன்ற நன்மைகள் இருக்கும். மாணவ மாணவிகளுக்கு தேர்வில் வெற்றியுண்டு. ஆனால், மதிப்பெண் எடுப்பதுதான் குறைவாக இருக்கும். நேராக இருக்கும் விரோதிகளையும் பலம் இழக்க வைக்கும் சனி. ஆனால் அதேநேரம் இடையிடையே சத்ருக்கள் மூலம் சிலருக்கு எழுத்து வகையிலும் பாதிப்பு உண்டாகும மேலும் தொழில் முயற்சிகளில் இன்னும் தடைகள் மற்றவர் குறுக்கீடு இருந்துகொண்டே இருக்கத் தான் செய்யும் என்றாலும் முயற்சி இருந்துகொண்டே இருக்கும். போட்டி, பந்தயம், சூதாட்டம் போன்றவை சிறுசிறு நட்டத்தைத் தான் கொடுக்கும். பகைப்பட்ட மனிதர்கள் இப்போது உங்களை அணுகவேண்டியிருக்கிறது. இந்த நேரத்தில் பழைய விஷயங்களை பேச்சளவில் சாதித்துக்கொள்ள முயற்சிக்கவும். பெண்கள் வகையில் நல்லபோக்கு இருக்கும். அவர்களால் அனுகூல செயல்களும் இருக்கின்றன. ஓர் உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு பண வகையில் தான் ஓரளவு திருப்தியுடையவர்கள். மற்ற வகையில் அவ்வளவு திருப்தி இல்லை. கடன் பாதிப்பு இல்லை. ஆனால் கடன் இருக்கும். வழக்கு இருந்தாலும் வேகமில்லாமல் இருக்கும். இயந்திரம் வாகனத்தொழில் செய்பவர்கள் இக்கட்டான சூழ்நிலையில் இருப்பர். எடுத்த காரியம் எதுவாக இருந்தாலும் உடனே முடிப்பீர்கள். உங்கள் வேகமான போக்கு எல்லோராலும் விரும்பப்படுவதாக இருக்கும். தொழில் வகையில் முழு காரிய சாதனையைப் பெறுவீர்.

## இடபம்



**கார்த்திகை 2,3,4வது பாதங்கள்-ரோகிணி 4 பாதங்கள்-மிருகசீரிடம் 1,2 பாதங்கள் வரை-9 பாதங்கள்**

வருடம் முடிந்தாலும் பழைய விஷயங்கள் சில உங்களை தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன. மேலும் நீங்கள் பொறுப்புகள் நிறைந்தவர்கள். விருப்பப்படி விரயம் செய்து வந்தீர்கள். இது காலகோளாறு தான் காரணம். உங்கள் கூட்டாளிகள் தெளிவு தைரியம் மிக்கவர்கள். அவர்களின் போக்கு செயல் உங்களுக்கு ஆதாயத்தையும் மனோ தைரியத்தையும் உண்டாக்கும். பூர்வீக சொத்துக்கள் வகையில் இருந்து வந்த இடையூறுகளை அகற்றி அதிகரிக்கும். செய்தொழில் எதுவாயினும் திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் இருக்கும் ஆண், பெண்களுக்கு புதியபொறுப்புகள் வந்துசேரும். அரசாங்க வகை மனிதர்களின் சந்திப்பு அவசர அவசிய பிரச்சினைகள் தீர்க்க உதவியாக இருக்கும். இதற்கு முன்பு இல்லாத அளவு செவ்வாய் உங்களுக்கு தைரியத்தை அளிக்கக்கூடியனவாகும். வழக்கு முயற்சிகள் இவற்றிற்கு நல்ல வாய்ப்புகள் கிட்டும். காணாமல் போனவையும் கிட்டும். உத்தியோகப் பிரிவினர்களுக்கு உயர்வு அல்லது இடமாற்றம் இருககும். வழகக்கு தள்ளிக்கொண்டே போகும். இத்தனைக்கும் காரணம் ஓர்அளவு ஏழரைச் சனியின் பாதிப்புத்தான் என்பது உண்மை அவை முழுமையாக விபத்து போன்றவற்றையும்கொடுக்க வாய்ப்பு உள்ளது. ஆகவே, மேலே கண்ட பலன்கள் ஒரே வழியாக நடந்துவந்தாலும் சுபக்கோளின் தன்மையால் இவற்றிற்கு தீர்வு உண்டு. மன திடத்தோடு செற்படும்போது இடையிடையே நன்மைகளையும் அனுபவிக்கத்தான் செய்கின்றீர்கள். சனியும் சாரமும் ஒன்று சேர்ந்தது குடும்பத்தில் சிக்கல் என்பது தவிர்க்கமுடியாது இதை புதுமணத் தம்பதிகள் கவனித்து செயற்படவேண்டும்.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3,4வது பாதங்கள் - திருவாதிரை 4 பாதங்கள் - புனர்பூசம் 1,2,3 பாதங்கள் வரை 9-பாதங்கள்**

வருடம் முடிந்து விட்டது என்று ஏக்கம் வேண்டாம். சிலவகை எழுத்து ஒப்பந்தம் போன்ற நன்மைகள் சிலவும் உண்டாகும் காலம். நீங்கள் தனித்து இயங்குவதை விட கூட்டு முயற்சி பலன் தருவதாக இருக்கும். குடும்ப சொத்து விவகாரங்கள் இருப்பவர்கள் அலைச்சல் உடையவர்களாக இருப்ப வர்களே தவிர, காரிய சாதனை கிடையாது. ஆனால் வழக்கு மட்டும் முடிவு பெறாது. வார்த்தை அளவில் நின்ற காரியங்களை செய்முறைக்கு கொண்டுவந்து விடுவீர்கள். இது பிற்பகுதியில் தான் சாத்தியமாகும். உறவினர் வருகை குடும்பத்தில் சுபச்செலவுகளை உண்டாக்கும் உத்தி யோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு விருப்பம் இல்லாத கடிதம் வருவது இலாகா மாற்றல் உத்தரவைப்பெறுவது போன்றவை இருக்கும். குழந்தைகள் ஆரோக்கிய வகையில் சிறுசிறு பாதிப்பு, மருந்து செலவுகளும் இருக்கும். பெண்களுக்கு இப்போது வந்திருப்பது புது இடம் தான். சில வகையில் மன திருப்தி இல்லாமல் இருப்பது என்றாலும் உடன் இருப்பவர்களை இதமாக சரிக்கட்டிப் போகவேண்டும். மேல்மட்ட மனிதர்கள் முதல் கீழ்நிலை யில் உள்ளவர்கள் இப்போது உங்கள் குணாதிசயங்களை பாராட்டுபவர்களாக இருப்பர். காலக்கோட்கள் அனுகூலமாக இருக்கின்றன. கடன் வரவு எதிர்பார்த்த உடனே வந்து சேரும். செய்தொழில வகையில் சலனமில்லை. மேல்மட்ட மனிதர்களின் தொடர்பு மேன்மை மிக்கது. சோர்வு கொள்ளும் நேரத்தில் உங்களுக்கு அனுகூல சூழ்நிலை உருவாகி வந்துவிட்டது. இப்போது கணவன் மனைவி வகைக்கு மருத்துவ செலவு இடம்பெறுவது தவிர்க்க முடியாது. சகோதர சகோதரி வகையில் சுபச் செலவுகளும் இடம்பெறும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு நல்ல இலாகா மாற்றத்தை இப்போது எதிர்நோக்கலாம். குடும்பத்தில் நாகரிக பொருள் சேர்க்கையும் நல்ல மனி தர்கள் அரசியல் அரசாங்க மனிதர்கள் நட்பும் மிக நெருக்கமாக இருக்கும். கலைப் பிரிவு ஆண், பெண்களுக்கு துணைவரும் மனிதர்கள் மூலம் பெரியதோர் முன்னேற்றம் இருக்கிறது. மேற்கு, வடமேற்கு திக்குப் பிரயாணம் பெருமை தருவதாக அமைந்திருக்கும். மாணவ மாணவி களுக்கு கல்வி மேன்மை திருப்தியானதே. உறவினர் இல்லங்களில் குடும்பத்துடன் சேர்ந்து விருந்துண்பது உண்டாகும். விவசாயிகளுககு இயந்திரக் கருவி வாங்குவது, குடும்பத்திற்கு நாகரிக பொருட்கள் வாங்குவது போன்ற நன்மைகள் இருக்கும். கணவன் மனைவி உறவில் இனிமையான போக்கே தொடர்ந்து வரும். காடு மலைப்பகுதி பிரயாணத்தை மேற்கொள்வது கூட உண்டாகும். வழக்கு வகையில் செலவுகள் சிலருக்கு இது தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். வார்த்தையோடு நின்றிருந்த விஷயங்கள் சில உருவகத்திற்கு வந்துவிடும். இக்காலம் நடுப்பகுதிக்கு மேல் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துவது போல் புத்திரர் புத்திரியர் வகையிலும் கவனம் செலுத்த வேண்டும். பழைய ஆபரணம் மாற்றுவது போன்றவை பெண்களுக்கு முக்கிய பலன்கள் ஆகும். இதேநேரம் பெண்கள் தங்கள் ஆரோக்கியத்தில் கவனமுள்ளவர்களாகஇருத்தல் வேண்டும். சகோதர சகோதரிகள் வகையில் சுபச்செலவுகளும் இடம்பெறும்.(தொடரும்)

**சோதிடமேதை ராமன்**

## இன்று ஒரு தகவல்

# பரதன் தொடங்கிய பழக்கம்

ஒரு சாலையோரமாக ஒருவர் பந்தல் போட் டுக கொண்டிருந்தார். "எதற்குப் பந்தல் போடுகின்றீகள் சார்?" என்று கேட்டனர் சிலர். "சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப் போகின்றேன்" என்றார் மிக அலட்சியமாக. கேட்டவர்களும் அதைப்பற்றி அலட்டிக்கொள்ளாமல் அவரவர் பாட்டுக்குப் போய்விட்டனர்.

இதைப்பற்றி நான் ஒரு பெரியவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். " என்ன சார் இது... இந்தப் பழக்கம் இவ்வளவு சர்வசாதாரணமாகப் போய்விட்டதே" என்றேன். "இந்தப் பழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் யார் தெரியுமா? " என்றார். யார்? என்று கேட்டேன். பரதன் தான் இதை ஆரம்பித்து வைத்தவன்" என்றார். யார்? ராமாயணத்தில் வரும் பரதனா? என்று கேட்டேன். "ஆம்" என்று கூறி ஆரம்பித்தார்.

அவர் வால்மீகி ராமாயணம் படித்தவர். காட்டில் போய்க்கொண்டிருந்த ராமனைப் பரதன் போய்ப் பார்க்கின்றான். "அண்ணா... நீங்கள் அயோத்திக்குத் திரும்பி வரவேண்டும். அரசுப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான். ஆனால் ராமர் "பிதுர்வாக்ய பரிபாலனம்" செய்துவிட்டுத்தான் திரும்புவேன் என்று பிடிவாதமாக இருந்தார்.

" நீங்கள் திரும்பி வராவிட்டால் நான் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போகின்றேன்" என்றான் பரதன். இப்படிச் சொன்னதோடு மட்டுமல்ல ராமனின் பர்ணசாலைக்கு எதி ரில் ஒரு பாயைவிரித்து உட்கார்ந்து விடுகிறான்.

இதைப் பார்த்த ராமன் "பரதா... நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்? ஏன் எனக்கு முன்பாக இருந்து உண்ணாவிரதம் இருப்பேன் என்று கூறுகிறாய்? அரசர்கள் இப்படிச் செய்வது தவறு. அதனால் உடனே எழுந்திரு. அயோத்திக்குத் திரும்பிப் போ" என்கிறார். ஆனால் பரதன் உட்கார்ந்த இடத்திலிருந்தே சுற்றி இருப்பவர்களைப் பார்த்து "நீங்களாவது என் அண்ணனுக்குச் சொல்லக் கூடாதா? " என்கிறான். அதற்கு அவர்கள் "நீ கூறுவதும் சரியாகத்தான் உள்ளது. ராமன் கூறுவதும் சரியாகத்தான் உள்ளது. நாங்கள் என்ன செய்வது" என்றனர். உடனே ராமன் "பரதா இவர்கள் கூறுவதைக் கேட்டாயல்லவா? அதனால் உடனே எழுந்திரு" என்றான்.

பரதனும் எழுந்து நின்று கூறுகிறான் அரசு வேண்டுமென்று நான் அப்பாவிடமும் கேட்கவில்லை அம்மாவிடமும் கேட்கவில்லை. "பிதுர்வாக்ய பரிபாலனம்" செய்துதான் ஆகவேண்டுமென்றால் உங்களுக்குப் பதில் நான் வனவாசம் போகின்றேன். நீங்கள் அரசுப் பொறுப்பேற்றுக் கொள்ளுங்கள் என்கிறான்.

இதற்கு ராமன் கூறிய பதில் என்ன தெரியுமா? "ஒரு காரியத்தைச் செய்வதற்கு நமக்குச் சாமர்த்தியம் இருக்கும் போது அதற்கு பிரதிநிதி வைத்தோமானால் உலகம் தூற்றும் என்றார். இது இன்றைக்கு எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு முக்கியமான கருத்து.

இன்று நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். நம்மால் முடியக்கூடிய காரியங்களுக்கெல்லாம் நமது பிரதிநிதிகளை அனுப்பிக்கொண்டிருக்கிறோம். அப்படி அனுப்புவதை ஒரு கௌரவமாக வேறு நினைக்கின்றோம். அந்தக்காலத்தில் இப்படிச் செய்தால் உலகம் தூற்றும் என்பது ராமனுடைய கூற்றிலிருந்து தெரிகிறது.

இன்னொரு விடயத்தையும் நாம் இந்தச் சம்பவத்திலிருந்து புரிந்துகொள்ளவேண்டும். தர்மகாரியம் ஒன்றைச் செய்யும்போது அதற்கு எத்தனையோ இடைஞ்சல்கள் வரலாம். பலர் ஆசை வார்த்தைகளைக் கூறுவார்கள். அவற்றைப் பொருட்படுத்தாமல் நாமும் ராமனைப்போல் திடமாக இருக்கவேண்டும் என்பதுதான் இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய மிகமுக்கியமான விடயம்.

அண்ணன்தான் ஆட்சிப் பொறுப்பேற்க வேண்டும் எனப் பரதன் நினைத்தது போல் இந்தக்காலத்திலும் சில தம்பிகள் உண்டு. அன்று ஒருநாள் ஒருசிறுவனைப் பார்த்தேன். அவன் கூறினான் "சார் எங்கள் தந்தை இறந்த பின்பு எங்கள் குடும்பப் பொறுப்பு முழுவதும் அண்ணனிடம் இருக்கட்டும் என்று மனப்பூர்வமாக நான் கூறிவிட்டேன். எனக்கு எந்தப் பங்கும் வேண்டாம் என்றும் கூறிவிட்டேன்" என்றான்."உங்கள் தந்தை இறக்கும் போது உங்களுக்கென்று விட்டுப்போனது எவ்வளவு இருக்கும்? என்று கேட்டேன். "சுமாராக 50ஆயிரம் இருக்கும்" என்றான். "என்ன பணமா? "என்றேன். "இல்லை!கடன்"என்றான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ரெலிக்கொம் தலைவரை பதவி நீக்குக
# திறைசேரி செயலருக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

ரெலிக்கொம் தலைவர் திலங்க சுமதிபாலவை அவரது பதவியிலிருந்து அகற்றுமாறு திறைசேரியின் செயலாளர் சரித்த ரத்வத்தைக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கும்படி கடந்த வாரம் ஜனாதிபதி தனது செயலாளர் கருணாரட்னவிற்கு பணித்துள்ளார். இதன்படி இவ் உத்தியோகபூர்வ கடிதம் கடந்த வெள்ளியன்று எழுதப்பட்டு ரத்வத்தைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஏனெனில் சுமதிபாலவின் பதவி நீக்கம் திறைசேரியால் மாத்திரமே செயற்படுத்தப்பட முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. சுமதிபாலவை விளக்கமறியலில் வைக்குமாறு மஜிஸ்ரேட் கடந்த திங்களன்று உத்தரவிட்டதைத் தொடர்ந்து ஜனாதிபதியின் இவ்வறிவித்தல் கிடைத்துள்ளது.

ஜனாதிபதியின் இம்முடிவு கடந்த வாரம் இடம்பெற்ற மனோ-மலிக் குழுவினரின் பேச்சுக்களின் போதே தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவ்விவகாரம் தொடர்பான ஜனாதிபதியின் நிலைப்பாட்டை புரிந்து கொண்ட சுமதிபாலவின் நெருங்கிய சகாவான எஸ்.பி. திஸாநாயக்க, ரெலிக்கொம் தலைவர் பதவியிலிருந்து இராஜினாமா செய்யுமாறு சுமதிபாலவை கேட்டுள்ளார். ஆனால், இதற்கு சுமதிபால மறுப்புத் தெரிவித்துள்ளார். (த-6)

# திருடர்கள் குறித்து விழிப்பாக இருக்குமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்து

(இருபாலை)

திருடர்கள் குறித்து மிகவும் விழிப்பாக இருக்குமாறு கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீ செல்வம் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

அண்மைக் காலங்களில் அதிகரித்து வரும் திருட்டுச் சம்பவங்கள் குறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர்,

திருடர்கள் நல்லவர்கள் போலவும் பிச்சைக்காரர்கள் போலவும் வேடம் போட்டு பொதுமக்களை நாடிச் செல்கின்றனர்.

பொதுமக்களின் அசண்டையீனத்தைப் பயன்படுத்தி தமது கைவரிசையை கனகச்சிதமாக காட்டியும் வருகின்றனர்.

எனவே, விழிப்புடன் நாம் செயற்படுவதன் மூலம் இவ்வாறான மோசடித்தனங்களை முறியடிக்கலாம்.

எமது வீட்டில் உள்ள சொத்துக்களுக்கு நாமே பொறுப்பாளிகள். வீட்டைப் பூட்டிவிட்டு வீட்டிலுள்ள அனைவரும் வெளியே செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

இவ்வாறான வேளைகளில் கள்வர்கள் விழிப்புடன் இருக்கிறார்கள். அதனால் களவுபோகும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

அத்துடன், தத்தம் பொருளாதார உயர்வு நிலைமைகளை வெளிச்சம் போட்டுக்காட்டும் வண்ணம் நடந்து கொள்வதும் கள்வர்க்கு வாய்ப்பாக அமைந்துவிடலாம் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.(உ-84)

## இராசி பலன்

27.01. 2004

(தை 13, செவ்வாய்க்கிழமை)

| | |
|---|---|
| சஷ்டி | பின்னிரவு 12.41 வரை |
| உத்தரட்டாதி | முற்பகல் 8.20 வரை |
| இராகுகாலம் | 03.36-05.06 மணிவரை |
| சுபநேரம் | 11.06-12.36 மணிவரை |

சஷ்டி விரதம்

**மேடம்**
காரிய அலைச்சல், சுபகாரியச் செலவு, உடல் நலக்குறை, மனஸ்தாபம்.

**இடபம்**
எடுத்த காரியம் கைகூடும், கலந்துரையாடல், புதிய பொருள் சேர்க்கை, கீர்த்தி.

**மிதுனம்**
தூரதேசச் செய்தி, நல்ல சம்பவம், செய்தொழில் முன்னேற்றம், போசன சுகம்.

**கடகம்**
புதிய தொழில் சிந்தை, எதிர்பாராத செலவு, காரிய தாமதம், பிரயாணம்.

**சிங்கம்**
ரோக நிலை, வாகன பயம், காரிய தடங்கல், சிந்தனை மிகுதி.

**கன்னி**
அதிக பிரயாசை, தெய்வசிந்தை, காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு.

**துலாம்**
பெருமையடைதல், பகைவர் நேசம், முயற்சி கைகூடும், தேக நலன்.

**விருச்சிகம்**
புத்திரரால் கவலை, சகோதரர் உதவி, காரிய தாமதம், ரோக நிலை.

**தனுசு**
பிரயாணக் கஷ்டம், காரிய தாமதம், மாதா சுகம், வீண் வார்த்தை.

**மகரம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், உறவினர் சந்திப்பு, சுவாரஸ்யம், தன இலாபம்.

**கும்பம்**
செல்வாக்குக் குறைவு, காரிய தாமதம், தன விரயம், கடுமையான முயற்சி.

**மீனம்**
சிந்தனை மிகுதி, எதிர்பாராத நன்மை, பெரியோரால் மதிக்கப்படுதல், ஆரோக்கியம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)
- வளவன்.

# அமைச்சர் சந்திரசேகரன் அழைப்பு அமைச்சர் ஆறுமுகம் நிராகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்க அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபடவேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அமைச்சர் பெ.சந்திரசேகரன் விடுத்துள்ள அழைப்பை இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் நிராகரித்துள்ளது.

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் நடத்திய சந்திப்பை அடுத்து அமைச்சர் சந்திரசேகரன் இவ்அழைப்பினை விடுத்திருந்தார்.

ஆனால், இவரது இவ் அழைப்பினை நிராகரித்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இது குறித்து அழைப்புவிட அமைச்சருக்கு எவ்வித அருகதையும் இல்லை எனக் கூறியுள்ளது.

இது குறித்து பெருந்தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் கருத்துத் தெரிவிக்கையில், பெருந்தோட்டப்பகுதி இளைஞர், யுவதிகளை ஏமாற்றும் வகையில் அமைச்சர் சந்திரசேகரன் இக்கருத்தினை தெரிவித்துள்ளார்.

அத்துடன் , ஜே.வி.பி. - ஸ்ரீ.சு.க. கூட்டு போல தமிழ்க் கட்சிகள் அனைத்தும் இணைந்து செயற்படமுடியாது.

ஆயினும், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு எனது ஆதரவு தொடர்ந்தும் கிடைக்கும் என்றார். இதேவேளை, அமைச்சர் சந்திரசேகரனின் அழைப்புக் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி கருத்துத் தெரிவிக்கையில்,

இலங்கையின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்க அனைத்து தமிழ்க்கட்சிகளும் ஒன்றுபட வேண்டும் என அமைச்சர் சந்திரசேகரன் அழைப்பு விடுத்ததாக கூறப்படுகின்றபோதும் அதுபற்றி எனக்கு உத்தியோக பூர்வமாக எதுவும் அறிவிக்கப்படவில்லை என்றார். (தி-60,10)

# தேர்தல் சீர்திருத்தம் குறித்து அரசியல் கட்சிகள் ஆராய்வு

(கொழும்பு)

தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றி அறிவிக்கவென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் பரிந்துரைகளை சகல அரசியல் கட்சிகளும் ஆராய்ந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் சீர்திருத்தங்கள் பற்றி கடந்த வெள்ளிக்கிழமை பாராளுமன்றத் தெரிவுக்குழு பாராளுமன்றில் அறிக்கையொன்றைச் சமர்ப்பித்திருந்தது.

இந்த அறிக்கையில் தேர்தல் தொகுதி அடிப்படையிலான வாக்களிப்பு முறையும் விருப்புரிமை வாக்களிப்பு முறையும் இணைக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

மேலும், செயல்படாதிருக்கும் அரசியல் கட்சிகளின் பதிவுகள் நீக்கப்பட வேண்டும் என்றும் பரிந்துரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, தேர்தல் சீர்திருத்தங்கள் சம்பந்தமான தெரிவுக்குழுவின் முடிவுகள் அறிவிக்கப்படும் கால எல்லை எதிர்வரும் யூன் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. (தி-60,10)

# இலவச வைத்திய முகாம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் மீசாலை விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் நேற்று முன்தினம் இலவச வைத்திய முகாமொன்று நடாத்தப்பட்டது.

மேற்படி வைத்திய முகாமில் இரத்த அழுத்தம், நீரிழிவு, பற்சுகாதாரம் மற்றும் இரத்தச்சோகை உட்பட மற்றும் பல நோய்களுக்குச் சிகிச்சை வழங்கப்பட்டது.

வைத்திய கலாநிதி எஸ்.எஸ். அருளானந்தம் தலைமையிலான குழுவினரால் நடாத்தப்பட்ட இவ் இலவச சிகிச்சை முகாமில் சுமார் 200ற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (தி-16)

# அமைதிக்குத் துணைநிற்கும் சகலருக்கும் இந்தியா எப்போதும் கடமைப்பட்டிருக்கும்

## குடியரசு தின உரையில் அப்துல் கலாம்

(புதுடில்லி)


சமாதானத்தை நிலைநாட்ட உதவும் சகலருக்கும் இந்தியா கடமைப்பட்டிருக்கும் என இந்திய குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் தனது குடியரசுத்தினச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 55 ஆவது குடியரசுத் தினமான நேற்று இந்தியக் குடியரசுத் தலைவர் அப்துல்கலாம் தொலைக்காட்சியில் விசேட உரையொன்றை ஆற்றினார்.

அதில் ஊழலை ஒழிக்க சகல அரசியல் கட்சிகளும் ஒன்றிணைய வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தார்.

போட்டியை எதிர்கொள்ளும் உத்வேகம் மிக்க நாடாக இந்தியாவை மாற்று முகமாக 10 அம்சத் திட்டமொன்றை அவர் அறிவித்தார்.

பொருளாதார வளர்ச்சி, பாதுகாப்பு,விண்வெளி,உட்பட பல



விடயங்கள் குறித்தும் அவர் பேசினார்.

குறிப்பாக மறைமுகப் போரில் ஈடுபடுவதாலும் ஆயுதங்களைக் குவிப்பதாலும் நேரடிப் போரில் இறங்குவதனாலும் நாட்டின் வளர்ச்சிதான் பாதிப்படைவதாக அவர் தனது குடியரசு தினச் செய்தியில் மேலும் குறிப்பிட்டுள்ளார். (து-9)



சிங்கப்பூரில் சனிக்கிழமை பலத்த சூறாவளியுடன் மழை பெய்தது. டிரைவரின் அஜாக்கிரதையால் ஒரு கார், நீச்சல் குளத்தில் இறங்கி மூழ்கியது. அதிர்ஷ்டவசமாக டிரைவர் உயிர் தப்பினார்.

# குற்றவாளியின் மிரட்டலால் வழக்கு வாபஸ் பெறப்பட்டது

## தென்னாபிரிக்காவில் பரபரப்பு

(பிரிடோரியா)

பாலியல் வல்லுறவு வழக்கொன்றில் தன்னை தென்னாபிரிக்க நீதிபதி மிரானா, மிரட்டியே வழக்கை மீளப் பெறறார். என தென்னாபிரிக்க சமூக சேவகி செலோமி தெரிவித் துள்ளார்.

தென்னாபிரிக்க சமூகசேவகி செலோமி பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கபட்ட முறைப்பாட்டை அடுத்து, தென்னாபிரிக்க நீதிபதி மிராணாவை காவல் துறையினர் கைது செய்திருந்தனர். இவ் வழக்கை செலோமி மீளப் பெற்றமையை அடுத்து நீதிபதி மிரானா சிறையில் இருந்து விடுதலை செய்யப்பட்டார்.

இந்நிலையில் நீதிபதி மீரானா தன்னை மிரட்டியே அந்த வழக்கை மீளப் பெறவைத்ததாக செலோமி தெரிவித்துள்ளமை அந்நாட்டில்பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (து-9)

# செவ்வாயில் அமெரிக்க விண்கலன்களின் ஆட்சி

(நியூயோர்க்)

செவ்வாய்க கிரகத்தில் ஆராய்ச்சியை மேற்கொள்ளும் முகமாக நாஸா விஞ்ஞானிகள் இரண்டாவதாக அனுப்பிய ஒபஜ்ஜூனிற்றி விண்கலம செவ்வாய்க் கிரகத்தில் தரையிறங்கிய சில மணி நேரத்திலேயே பல்வேறு புகைப்படங்களை பூமிக்கு அனுப்பியுள்ளது.

ஸ்பிரிடடைத் தொடர்ந்து தரையிறங்கிய இந்த விண்கலம் ஸ்பிரிட் ஆய்வுக் கலத்திற்கு எதிர்த் திசையில் தனது பணிகளை மேற்கொண்டு வருவதாக நாஸா விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

,செவ்வாய்க் கிரகத்தில் தண்ணீர் இருக்கிறதா என்பது உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக அமெரிக்காவின் விண்வெளி ஆய்வு நிலையமான நாஸா ஸ்பிரிட் மற்றும் ஒபஜ்ஜூனிற்றி ஆகிய விண்கலங்களை செவ்வாய்க் கிரகத்துக்கு அனுப்பியது.

இவற்றில் இம்மாத ஆரம்பத்தில் செவ்வாயைச் சென்றடைந்த ஸ்பிரிட் அங்கிருந்து புகைப் படங்களை அனுப்பிவைத்தது.

எனினும் இந்த விண்கலத்துடனான தொடர்பு திடீரெனத் துண்டிககப்பட்ட போதிலும் தற்போது மீண்டும் செயற்படத் தொடங்கியுள்ளது.

இந்த நிலையில் மற்றைய ஆய்வுக் கலமான ஒபஜ்ஜூனிற்றி நேற்று முன்தினம் செவ்வாய்க் கிரகத்தில் வெற்றிகரமாக தரையிறங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (து-9)

# அமெரிக்க காங்கிரஸ் சபையின் விசேட குழு லிபியா விஜயம்

(திரிப்போலி)

அமெரிக்கக் காங்கிரஸ் சபையின் விஷேட குழுவொன்று லிபியாவுக்கு விஜயம் செய்துள்ளது.

லிபியாவின் ஜனாதிபதியாக ஜென்ரல் மொகமட் கடாபி பதவியேற்ற பின்னர் அமெரிக்காவில் இருந்து அந்த நாட்டுக்கு விஜயம் செய்யும் முதல் அரச பிரதிநிதிகள் குழு இதுவாகும்.

இக்குழு லிபியாவின் அரசியல் தலைவர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களைச் சந்தித்து இருநாட்டு அரசியல் பொருளாதார உறவுகள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தவிருக்கின்றது.

இக்குழுவில் அமெரிக்கக் காங்கிரஸ் சபையினதும் குடியரசு மற்றும் ஜனநாயக்க கட்சிகளினதும் பிரதிநிதிகள் இடம்பெற்றிருக்கிறார்கள்.

இவர்களது விஜயம் இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளை பலப்படுத்துவதுடன்,அந்த நாட்டின் மீதான பல தடைகளும் தளர்தப்படவும் உதவும் என நோக்கர்கள் தெரிவித்துள்ளனர்.

லிபிய ஜனாதிபதி ஜெனரல் மொகமட் கடாபி அண்மைக் காலமாகக் கடைப்பிடித்து வரும் நெகிழ்சசிப் போக்கையடுத்து ஐக்கிய நாடுகள் சபை அதன் மீதான பொருளா தாரத தடைகளைத தளர்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (து-9)



சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற தேசிய அபாஸ்கர் போட்டியில் மூளைக்குச் சவால் விடும்கணக்குகளை ஒரு கை பார்க்கும் 5வயதுச் சிறுமி

# தீவிரவாதிகளின் தாக்குதலுக்கு இரண்டு அமெரிக்கர்கள் பலி

ஈராக்கில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலில் அமெரிக்க இராணுவத்தின் ஹெலி ஒன்று சேதமடைந்துள்ளதுடன் அதில் சென்ற இரண்டு இராணுவ வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஈராக்கின் திக்ரித் நகரில உள்ள ஆற்றுக்கு மேலாக 350 கிலோ மீற்றர் உயரத்தில் ஹெலி பறந்து கொண்டிருந்தபோது ஆற்றில் சென்றுகொண்டிருந்த இயந்திரப்படகு ஒன்றில்இருந்து இத்தாக்குதல் மேற்கொள்ளப் பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இத் தாக்குதலில் சேதமடைந்த ஹெலி கெப்ரரின் பாகங்களை தேடும் பணியில் ஈடுபட்டிருந்த ஈராக்கிய பொலிஸார் ஒருவர் கார் ஒன்றில் சென்ற தீவிரவாதி ஒருவரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனார் என .அங்கிருந்து கிடைக்கும் மேலதிக செய்திகள் தெரிவிக்கின்றன.(து-2)

# உத்திரப் பிரதேச முன்னாள் முதலமைச்சர் மாயாவதியின் வங்கிக் கணக்குகளில் பலகோடி

(புதுடில்லி)

உத்திரப் பிரதேச முன்னாள் முதலமைச்சர் மாயாவதிக்கு 60 வங்கிகளில் கோடிக் கணக்கான பணம் இருப்பதாக மத்திய புலனாய்வுத்துறையினர் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இவர் மீதான தாஜ்மகால் ஒப்பந்த ஊழல் வழக்கை உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் விசாரணை செய்துவரும் மத்திய புலனாய்வுத்துறை, மாயாவதியின் வங்கிக் கணக்குகளையும் சொத்துக்களையும் மதிப்பீடு செய்து வருகின்றது.

இந்த மதிப்பீடுகள் குறித்து மத்திய புலனாய்வுத்துறை தாக்கல் செய்துள்ள முதல் தகவல் அறிக்கையில், மாயாவதி மற்றும் அவரது உறவினர்களின் பெயரில் வங்கிகளில் பல கோடி ரூபா மதிப்புள்ள சொத்துக்கள் இருப்பதாக தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. (து-9)

# ஒப்பந்தம் கைச்சாத்து

(ஜகார்த்தா)

இந்தோனேஷியாவும் பங்களா தேஷ்ஷூம் தமக்கிடையிலான வர்த்தக உறவுகளை பலப்படுத்திக் கொள்ளும் நோக்குடன் ஒப்பநதங்களை மேற்கொண்டுள்ளன.

பங்களாஷேின் பிரதமர் இந்தோனேஷியப் பிரதமர் மேகவதி சுகர்ணோ புத்திரியுடன் இரு தினங்களுக்கு முன் பேச்சுவார்த்தைகளை நடாத்தியிருந்தார்.

இதனையடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (து-9)



சீனாவில் இந்த ஆண்டு குரங்குகளுக்கான புத்தாண்டாகும். இதனை முன்னிட்டு அங்கு விசேட நிகழ்வுகள் பல இடம் பெற்று வருகின்றது. அங்குள்ள கோயில் ஒன்றின் முன்பாக பொய்க்கால்களுடன் வித்தை காட்டும்கலைக் கூத்தாடியே இவர்..

## பறவைக்காய்ச்சலுக்கு தாய்லாந்தில் சிறுவன் பலி


(பாங்கொக்)

தாய்லாந்தில் வேகமாக பரவி வரும் பறவைக் காய்ச்சல் நோயினால் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்

தாய்லாந்தின் பிஜ்ஜானிமிஜேக் மாநிலத்தில் அண்மையில் 2 சிறுவர்கள் உயிரிழந்ததாகவும் இவர்களில் ஒருவர் பறவைக் காய்ச்சல் காரணமாகவே உயிரிழந்துள்ளார் என்றும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிரிழந்த 6வயது சிறுவன் கோழிப்பண்ணை ஒன்றிற்கு அருகில் வசித்து வருபவன் என தெரிவிக்கப்படுகின்றது.

தாய்லாந்தில் வேகமாக பரவி வரும் இப்பறவைக் காய்ச்சல் நோயினால் பல ஆயிரக் கணக்கான கோழிகள் கொன்றழிக் கப்பட்டுவருகின்றமை தெரிந்ததே. (து-2)



கொல்கத்தாவுக்கு நேற்றுமுன்தினம் சென்ற உலகின் மிகப் பெரிய கணனி மென்பொருள் நிறுவனமான மைக்ரோ சொப்ரின் தலைவர் பில்கேட்ஸின் மனைவி மெலிண்டா கேட்ஸ்சை வரவேற்கும் பெண். மெலிண்டகேட்ஸ் இந்தியாவில் எயிட்ஸை எதிர்க்கும் விழிப்புணர்வுக்காக 900கோடி ரூபாவை நன்கொடையாக வழங்கியுள்ளாார்.

# கைத்தொழில் திட்டங்களை பார்வையிட குடாநாட்டிலிருந்து 9 பேர் கொண்ட குழு ஜப்பான் பயணம்

(யாழ்ப்பாணம்)


ஜப்பானில் மேற்கொள்ளப்பட்டு வரும் கைத்தொழில் அபிவிருத்திச் செயற்றிட்டங்களை நேரில் பார்வையிடுவதற்காக யாழ். குடாநாட்டிலிருந்து 9 பேர் அடங்கிய குழுவொன்று எதிர்வரும் 7ஆம் திகதி டோக்கியோ பயணமாகவுள்ளது.

புறோமோட்டோர்ஸ் எஞ்சினியரிங் பிறைவேட் லிமிட்டெட்டைச் சேர்ந்த பொறியியலாளர் ரி.பூரணச்சந்திரன், யூரோ நிறுவனப் பொறியியலாளர் எஸ். ராமதாஸ், யாழ். வணிகர் கழகத் தலைவர் எஸ். ஜெயசேகரம் மற்றும் வைத்திய கலாநிதி எஸ். குணநாயகம் ஆகியோர் உட்பட 9 பேர் அடங்கிய குழுவே டோக்கியோ செல்லவுள்ளது.

கொழும்பில் இயங்கிவரும் இலங்கைக் கைத்தொழில் அபிவிருத்தி நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஜப்பானில் மேற்கொள்ளப்படும் கைத்தொழில் அபிவிருத்தித் திட்டங்களைப் பார்வையிடுவதற்காக நாடளாவிய ரீதியில் 40 பேர் அடங்கிய குழு அங்கு பயணமாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(தி-16)



அண்மையில் புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்தக் கல்லூரியில் இடம்பெற்ற உயர்தர மாணவர் ஒன்றுகூடல் நிகழ்வில், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட பேராசிரியர் க. சின்னத்தம்பி மங்கள விளக்கேற்றுவதை படத்தில் காணலாம்.



யாழ். கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் இடம்பெற்ற கால்கோள் விழாவில் அதிபர் அ. நடராஜலிங்கம் பாடசாலைக் கொடியேற்றுவதையும், விருந்தினர்களாகக் கலந்துகொண்ட ஓய்வுபெற்ற விவசாய ஆசிரிய ஆலோசகர் வே. கைலைநாதன், ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் பூ.குகதாசன் மற்றும் ஓய்வுபெற்ற ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ். மகேஸ் ஆகியோரையும் படத்தில் காணலாம்.



## மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சு

## திருத்தம்

### வடகிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அரசாங்க தமிழ்மொழி மூல பாடசாலைகளுக்கு இலங்கை ஆசிரிய சேவையின் 3-11 வகுப்பைச் சேர்ந்த தமிழ்மொழி மூலமான ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்யும் போட்டிப் பரீட்சை-2003

2003.12.12 திகதி மற்றும் இலக்கம் 1319 கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்ட வடகிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள அரச தமிழ்மொழி மூல பாடசாலைகளுக்காக இலங்கை ஆசிரிய சேவையின் 3-11 வகுப்பிற்கு தமிழ்மொழி மூல ஆசிரியர்களை சேர்த்துக்கொள்வதற்கான போட்டிப் பரீட்சை-2003 என்ற அறிவித்தலில் 02 ஆவது பந்தியின் 2.1 வாசகத்தின் இலக்க iii உம் 02 ஆவது பந்தியின் 2.2 வாசக ''ஆ'' தலைப்பு மற்றும் அதன் 3 ஆம் குறிப்பின் 4வது பந்தி 6வது பந்தியின் 6.3 வாசகம் மற்றும் 7ஆவது பந்தியின் 7.3 வாசகமும் கீழ் குறிப்பிடப்பட்டவாறு திருத்தியமைக்கப்படுகின்றன.

2.1 iii 2003 டிசம்பர் 01 ஆம் திகதியன்று 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35ற்கு மேற்படாதவராகவும் இருக்கவேண்டும்.

**2.2 கல்வித் தகைமைகள்**

(ஆ) ஆட்சேர்ப்புச் செய்து கொள்வதற்குரிய பாடங்களுக்கேற்ப இருக்கவேண்டிய குறைந்தபட்சத் தகைமைகள்

1. விஞ்ஞானபாடம்:
க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தின்படி பௌதிகவியல், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் அல்லது புதிய பாடத்தின்படி பௌதிகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாடங்களுடன் குறிப்பு 3 இல் காட்டப்பட்டுள்ளபடி தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

2. கணிதபாடம்:
க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் பழைய பாடத்திட்டத்தின் படி பௌதிகவியல், இரசாயனவியல் தூயகணிதம், பிரயோக கணிதம் அல்லது புதிய பாடத்திட்டத்தின் படி பௌதிகவியல், இரசாயனவியல், இணைந்த கணிதம் ஆகிய பாடங்களுடன் குறிப்பு 3ல் காட்டப்படும் வகையில் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

3. ஆரம்பக்கல்வி:
க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் தமிழ்மொழியுடன் குறிப்பு 3ல் காட்டப்பட்டுள்ளபடி வகையில் தகைமை பெற்றிருக்கவேண்டும்.

4. ஆங்கிலம்:
க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் ஆங்கில பாடத்துடன் குறிப்பு 3ல் காட்டப்படும் வகையில் தகைமை பெற்றிருத்தல் அல்லது க.பொ.த. (சா/த) பரீட்சையில் இரண்டுதடவைகளுக்குமேற்படாதவாறு ஆங்கில மொழியில் சித்திபெற்றிருப்பதோடு ஏதாவதொரு பாடத்துறையின் கீழ் குறிப்பு 3ல் காட்டப்பட்டுள்ளபடி தகைமைகளை பெற்றிருக்கவேண்டும்.

5. சங்கீதம்:
க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சங்கீத பாடத்துடன் குறிப்பு 3ல் குறிப்பிடப்பட்டவாறு தகைமை பெற்றிருக்கவேண்டும்

6. சித்திரம்:
க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் சித்திரப்பாடத்துடன் குறிப்பு 3ல் குறிப்பிடப்பட்டவாறு தகைமை பெற்றிருத்தல் வேண்டும்.

7. நடனம்:
க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் நடனப் பாடத்துடன் குறிப்பு 3ல் குறிப்பிடப்பட்டவாறு தகைமை பெற்றிருக்கவேண்டும்.

8. விவசாயம்:
க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் விவசாயப் பாடத்துடன் குறிப்பு 3ல் குறிப்பிடப்பட்டவாறு தகைமை பெற்றிருக்கவேண்டும்.

9. மனைப்பொருளியல்:
க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் மனைப்பொருளியல் பாடத்துடன் குறிப்பு 3ல் குறிப்பிடப்பட்டவாறு தகைமை பெற்றிருக்கவேண்டும்.

10. உடற்கல்வி:
உடற்கல்வி பாடத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தின் மூலம் பெற்றுக்கொண்ட பயிற்சிச் சான்றிதழுக்கு மேலதிகமாக குறிப்பு 3ல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தகைமை பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு:-

3.0 பல்கலைக்கழகம் ஒன்றில் பிரவேசிப்பதற்கான தகைமைகளுடன் கா.பொ.த. (உ/த) சித்தியடைந்திருத்தல் என்பது பின்வருமாறு அமைந்திருக்க வேண்டும்.


3.i ஒரே தடவையில் குறைந்த பட்சம் அனுமதிக்கப்பட்ட பாடங்கள் மூன்றில் சாதாரண சித்தி பெற்று பெறுபேற்று அட்டவணையில் பல்கலைக்கழகத்தில் பிரவேசிப்பதற்காக தகைமைகள் பெற்றிருப்பதாக குறிப்பிடப்பட்டிருத்தல் அல்லது அதுபற்றி உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.

3.ii ஒரே தடவையில் அனுமதிக்கப்பட்ட 3 பாடங்களில் குறைந்த பட்சம் சாதாரண சித்தி பெற்று பெறுபேற்று அட்டவணையில் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்கு தகைமைகள் பெற்றிருப்பதாக குறிப்பிடப்பட்டிருத்தல் அல்லது அதுபற்றி உறுதிப்படுத்தப்பட்டிருத்தல்.

4.0 பரீட்சை நிலையம்.

கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்களின் பிரதான நகரங்களில் அமைந்துள்ள பரீட்சை நிலையங்களில் பரீட்சை நடைபெறும். பரீட்சை நிலையம் நிறுவ போதிய அளவு விண்ணப்பதாரர்கள் இல்லாதிருக்கும் பட்சத்தில் அவ்விண்ணப்பதாரர்கள் அருகாமையில் உள்ள பரீட்சை நிலையத்திற்கு மாற்றப்படுவர்.

| மாவட்டம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 0.1 |
| அம்பாறை | 0.2 |
| மட்டக்களப்பு | 0.3 |
| [illegible] | 0.4 |



இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் அண்மையில் கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்ட தெற்குவாசல் இராஜகோபுரத்தின் முகப்புத் தோற்றம்.

| மாவட்டம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| கொழும்பு | 0.1 |
| அம்பாறை | 0.2 |
| மட்டக்களப்பு | 0.3 |
| திருகோணமலை | 0.4 |
| யாழ்ப்பாணம் | 0.5 |
| முல்லைத்தீவு | 0.6 |
| மன்னார் | 0.7 |
| கிளிநொச்சி | 0.8 |
| வவுனியா | 0.9 |

6.0 விண்ணப்பிக்கும் முறை:

6.3 சரியாகப்பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2004.1.31 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பு "பரீட்சை ஆணையாளர் நாயகம், இலங்கை பரீட்சைத்திணைக்களம் பெலவத்த பத்தரமுல்ல" என்ற முகவரிக்கு கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலம் அனுப்பப்படவேண்டும்.

7.0 7.3 விண்ணப்பப்பத்திரத்தின் இலக்கம் 03-

ஒரு விண்ணப்பதாரர் ஒரு ஆசிரிய வகைக்கு மாத்திரமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பிக்கும் ஆசிரிய வகையின் அடையாள இலக்கத்தை விண்ணப்பப்பத்திரத்தில் உள்ள 03ஆம் கூட்டில் குறிப்பிட வேண்டும். ஆசிரிய வகையைத் தெரிவு செய்கையில் அறிவித்தலின் 2ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கவும்.

| ஆட்சேர்ப்புச் செய்யப்படும் பாடத்துறை | குறியீட்டு எண் |
|---|---|
| விஞ்ஞானம் | 01 |
| கணிதம் | 02 |
| ஆரம்பக்கல்வி | 03 |
| ஆங்கிலம் | 04 |
| சங்கீதம் | 05 |
| சித்திரம் | 06 |
| நடனம் | 07 |
| விவசாயம் | 08 |
| மனைப்பொருளியல் | 09 |
| உடற்கல்வி | 10 |

2003 டிசம்பர் மாதம் 15ஆம்திகதி
மனிதவள அபிவிருத்தி கல்வி
கலாசார அலுவல்கள் அமைச்சு
"இசுருபாய"
பத்தரமுல்ல.

**வீ.கே. நாணயக்கார**
**செயலாளர்**
**மனிதவள அபிவிருத்தி கல்வி கலாசார**
**அலுவல்கள் அமைச்சு.**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சந்திரசேகரனின் சமரச முயற்சி சந்தேகங்களைத் தோற்றுவிக்கிறது

## முன்னாள் பா. உ. தவராஜா அதிருப்தி

(கொழும்பு)

**அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றிணைத்து இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சியில் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தீவிரமாக ஈடுபட்டிருப்பது மக்கள் மத்தியில் சில சந்தேகங்களைத் தோற்றுவித்திருக்கின்றது.**

**அமைச்சர் சந்திரசேகரன் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் உண்மையான அர்ப்பணிப்புடன்தான் செயற்படுகின்றாரா? அல்லது அரசியல் இலாபங்கருதியே இத்தகைய முயற்சியில் இறங்கியுள்ளாரா? என்பதுதான் தற்போது மக்களிடையே எழுந்துள்ள சந்தேகமும் வினாவும் என ஈ.பி.டி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.தவராஜா தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தினால் நடாத்தப்பட்டுவரும் விடியும வேளை நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்தும் கருத்துக் கூறுகையில்,

தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றுபட்டு தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முன்வரவேண்டும் என அமைச்சர் சந்திரசேகரன் கூறியிருப்பது ஒரு வகையில் சரியாக இருந்தாலும் கடந்த கால அனுபவங்களையும், கசப்பான சம்பவங்களையும் மீள நினைததுப்பார்கின்றபோது அவரது அழைப்பை நாங்கள் ஏற்க முடியாத நிலையில் இருக்கின்றோம்.

ஏனெனில், தமிழ்க்கட்சிகள் கூட்டிணைகின்றபோது, அதனைத் தமிழீழ விடுதலைப் புலிகளே வழி நடத்தப் போகின்றார்கள்.

சகல இயக்கங்களையும் நேசித்து அவர்களின் கருத்துக்களை ஏற்று நடகக விடுதலைப்புலிகள் முன்வர வேண்டும். அவ்வாறு அவர்கள் முன்வருவார்களாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் நாங்கள் ஒன்றிணைந்து செயற்படலாம்.

இதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் எமது கட்சியை மிகவும் கடுமையாக விமர்சித்து வருகினறார்கள். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இந்த விமர்சன நடவடிக்கையில் முன்னணியாகத் திகழ்கின்றார். தனது வாழ்நாளில் முக்கால் பங்கை லண்டனில் கழித்து வரும் இவருக்கு அரசியல் பற்றி போதிய அறிவும் அனுபவமும் இல்லை சிறு பிள்ளைத்தனமாகப் பேசிவரும் இவர், அனுபவத்தாலும் அறிவாலும் முதிர்ந்த விநாயக்மூர்த்தியிடம் சென்று அது பற்றிப் படித்துக் கொள்ளலாம்.

அத்துடன், தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே எனவும் தமிழ் தேசியகூட்டமைப்பினர் கூறிவருகின்றனர்.

ஏகப்பிரதிநிதிகள் என்ற சொற்பிரயோகம் ஜனநாயக நடைமுறையில் இல்லை. ஜனநாயகம் என்பது சமூகம் மாற்றுக் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளும், சகித்துக்கொள்ளும் தன்மை.

அத்துடன் ஏகப்பிரதிநிதிகள் என்ற சொல் சுதந்திரமாகவும் நேர்மையாகவும் நடத்தப்பட்ட தேர்தலில் மக்களால் பெரும்பான்மையாக தெரிவு செய்யப்பட்டவர்களுக்குக் கூடப்பொருத்தமற்றது.

விடுதலைப் புலிகள் மட்டும் தமிழ் மக்களுக்காகத் தியாகஞ் செய்யவில்லை. வடக்குக் கிழக்கு மாகாணத்தில் உள்ள சகல தமிழ்க் கட்சிகளும்தான் தமிழ் மக்களுக்காக இரத்தம் சிந்தியுள்ளன.

முஸ்லிம் மக்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும். சம அந்தஸ்து கிடைக்க வேண்டும். அவர்களும் எமது சகோதர இனம்தான். அவர்களை நாம் ஓரங்கட்டிவிட்டு இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாது.

இதற்கிடையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பிக்கும் இடையே செய்து கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தை ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வரவேற்றிருப்பது தமிழ் மக்கள் மத்தியில் கடும் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும், இத்தகைய செயலால் தமிழ் மக்கள் வெட்கித் தலை குனிய நேரிட்டுள்ளதாகவும் இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கடந்தவாரம் பாராளுமன்றில் கூறியிருந்தார்.

இனவாத சக்தியான ஜே.வி.பிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே செய்துகொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வில் கலந்து கொண்ட டக்ளஸ் தேவானந்தா கைதட்டி வரவேற்றார் என்றும் விமர்சித்திருந்தார்.

இங்கு நான் அமைச்சர் மகேஸ வரனுக்குக் கூற விரும்புவது என்னவென்றால் எமது கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வியாபார நோக்கத்திற்காக அந்நிகழ்வில் பங்குபற்றவில்லை. அவர் தமிழ் மக்களின் பிரச்சினைகள் விரைவில் தீர்க்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே அங்கு சென்றிருந்தார். நீண்ட காலமாகவே எமது கட்சி தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்படவேண்டியதன் அவசியம் பற்றி ஜே.வி.பிக்கு எடுத்துக் கூறிவருகிறது.

எமது தொடர்ச்சியான அழுத்தம் காரணமாகவே ஜே.வி.பியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியிருப்பதால் நாம் அதுபற்றி புலிகளுடன் பேசவும் தயாராகவுள்ளோம் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

அதுமட்டுமன்றி ஜே.வி.பியினர் இனவாத சக்தியென அமைச்சர் மகேஸ்வரன் கூறியிருக்கின்றார். அவர்கள் அவ்வாறு இனவாத சக்தியாக இருந்தாலும் இனப்பிரச்சினைத் தீர்வுக்கு முன்னுரிமை வழங்கியிருக்கின்றார்கள். அது மட்டுமன்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண சகல கட்சிகளுக்கும் அழைப்பு விடுத்திருக்கின்றார்கள் என்பதைக் கூறிவைக்க விரும்புகின்றேன் என்றார்.

(உ-10,60)

## கிருமி நாசினி தெளிகருவிகள் வழங்கல்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள இரண்டு கிராமிய சமுர்த்திச் செயலணிகளுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனத்தினால் கிருமிநாசினி தெளிகருவிகள் வழங்கப்படவுள்ளன.

தம்பாட்டி கிராமிய சமுர்த்திச் செயலணிக்கும் நாரந்தனை தெற்கு கிராமிய சமுர்த்திச் செயலணிக்குமே தலா ஒவ்வொரு கிருமிநாசினி தெளிகருவிகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி தெளிகருவிகள் இச்செயலணிகளுக்கு உட்பட்ட விவசாயிகளின் பாவனைக்கு சிறிய தொகை வாடகையுடன் வழங்கப்படவுள்ளன.

(உ-75)

## சமூகத்தின் எதிர்பார்ப்பை சிதறடிக்காது பாடசாலைகள் செயற்படவேண்டும்

### வலி. கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(கோப்பாய்)

கலாசாரக் கட்டுமானத்துடன் கூடிய வினைத்திறன் மிக்க மாணவர்களை உருவாக்கும் உன்னதப் பொறுப்புடைய நிறுவனமாக பாடசாலைகள் விளங்க வேண்டும்.

இதுதான் இன்றைய சமூகத்தின் அதிமுக்கிய எதிர்பார்ப்பாகவும் உள்ளது.

உரும்பிராய் றோ.க.த.க. பாடசாலையில் தரம் 1 மாணவர்களை அனுமதிக்கும் கால்கோள் விழா, அதிபர் மு.விக்கினேஸ்வரன் தலைமையில் அண்மையில் இடம் பெற்றபோது நிகழ்வில் சிறப்பு அதிதியாகப் பங்கேற்ற வலி.கிழக்கு அரசியல்துறைப் பொறுப்பாளர் து.கிரி இவ்வாறு தெரிவித்தார்.

கிரி மேலும் அங்கு உரையாற்றுகையில்,

பெற்றோர்களின் அரவணைப்பில் இருந்துவிடுபட்டு, மழலைச் செல்வங்கள் பாடசாலைக்குள் கால்பதிக்கும் போது இந்த எதிர்காலச் சிற்பிகள் நாட்டை வளம்படுத்துவர் என்ற நம்பிக்கை ஏற்படுவது எவருக்கும் இயல்பே.

இந்த எதிர்பார்ப்பைச் சிதறடிக்காது அந்த இலக்கை நோக்கி மாணவர்களை முன்னகர்த்தும் முழுப் பொறுப்பும் பாடசாலையின் அதிபர் ஆசிரியர்களையேசாந்தது.

பாடசாலைகள் கல்விப் பணியோடு மட்டும் நின்றுவிடாது இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் மாணவர்களை முழுமையாக ஈடுபடுத்தவேண்டும் எனக் குறிப்பிட்டார். (உ_79)

## பனிப்போருக்கு வித்திட்ட பாதுகாப்பு ஒப்பந்தம்

(கொழும்பு)

இந்தியாவிற்கும் இலங்கைக்குமிடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் அடுத்தமாத இறுதியில் கைச்சாத்திடப்படவிருப்பதாக இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணி அரசிற்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவிற்குமிடையே பனிப்போர் ஒன்று இடம்பெற்றுவருவது தெரிந்ததே.

இத்தகைய ஒப்பந்தம் ஒன்றை இந்தியாவுடன் செய்து கொள்வதற்கு முயன்று வந்தது. இது விடயமாக கடந்தவருட இறுதியில் பிரதமர் இந்தியாவிற்கு விஜயம் ஒன்றையும் மேற்கொண்டிருந்தார்.

ஆனால், கடந்த நவம்பர் மாதம் 4ஆம் திகதி பாதுகாப்பு அமைச்சைப் பொறுப்பேற்றபின் ஜனாதிபதி இவ்விடயத்தில் முனைப்புடன் செயற்பட்டுவருகிறார்.

இதன் காரணமாக ஐக்கிய தேசிய முன்னணி ஜனாதிபதி மீது விசனம் கொண்டுள்ளது. இதனால், இவ் ஒப்பந்தத்தின் மூலம் ஜனாதிபதிக்குக் கிடைக்கவுள்ள அரசியல் அனுகூலத்தை தவிர்க்கும் முகமாகவே விஞ்ஞான தொழில்நுட்ப மறுசீரமைப்பு அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்விஜயத்தின்போது அவர் பல அரசியல் தலைவர்களையும் சந்தித்து மேற்படி ஒப்பந்தம் கைச்சாத்திடுவதை ஒத்திவைக்குமாறு கோரியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ் விஜயத்திற்கு முன்பாக இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவராலயம் ஊடாக ஐக்கிய தேசிய முன்னணி அரசு இது விடயம் தொடர்பில் கோரிக்கை விடுத்திருந்தும் அது பயனற்றுப் போனது தெரிந்ததே.

இதேவேளை, இவ் ஒப்பந்தம் கைச்சாத்திடுவதை விரைவுபடுத்த ஜனாதிபதி கடும்பிரயத்தனம் செய்து வருகிறார்.

இதன் முதல் கட்டநடவடிக்கையாக பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஸ்ரீஹேரத், ஒருங்கிணைப்பு தளபதி லெப்.ஜெனரல் லயனல் பலகல்ல உள்ளிட்ட குழுவினர் விரைவில் கைச்சாத்திடப்படவுள்ள இவ் இந்திய - இலங்கை பாதுகாப்பு உடன்படிக்கை தொடர்பில் பலமுக்கிய பேச்சுக்களை நடத்தியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(உ-4)

## கல்முனையில் முஸ்லிம்கள் தீர்மானம்

(கொழும்பு)

முஸ்லிம் அரசியல் தலைவர்கள் ஓரணியில் திரண்டு முஸ்லிம்களின் பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை உறுதிசெய்யவேண்டும் என்று தீர்மானம்நிறைவேற்றப்பட்டுள்ளது.

கல்முனை முகைதீன் பள்ளி வாசலில் நடைபெற்ற முக்கிய கூட்டம ஒன்றிலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன், முஸ்லிம் மக்களின் பொதுவான அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது எனவும், அவர்கள் ஏனைய சமூகத்தவர்களுடன் ஒன்றிணைந்து வாழ்வதற்கான சமூக உறவுகளைக கட்டியெழுப்புவது எனவும், முஸ்லிம்களுக்குள்ள அரசியல் உரிமைகளை தொடர்ந்தும் பாதுகாப்பது எனவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. (தி-4)

## மிலேனியம் சிற்றி களஞ்சியம் மீது சோதனை நடத்தியவர்களின் விபரங்களை வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவக் களஞ்சியம் மீது திடீர்ச் சோதனைகளை நடத்திய பொலிஸ் உத்தியோகத்தர்களின் விபரங்களை வழங்குமாறு பொலிஸ்மா அதிபர் இந்திரா டி.சில்வா கண்டி பிரதிப் பொலிஸ்மா அதிபரைப் பணித்துள்ளார்.

அததுடன், இவ் இராணுவக் களஞ்சியம் மீதான விசாரணை அறிக்கைகளையும் ஏனைய ஆவணங்களையும் உடனடியாக அனுப்பி வைக்குமாறும் அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு நடத்திய விசாரணை அறிக்கையில், உடுகம் பொல உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தனிப்பட்ட காரணங்களின் அடிப்படையிலேயே இச்சோதனைகளை நடத்தனர் எனவும், ஜனாதிபதி ஆணைக் குழுமுன் சாட்சியமளிக்க மறுத்து வருபவரும் இதில குற்றம் சாட்டப்பட்ட மற்றுமொரு இராணுவ அதிகாரியுமான மேஜர் பத்மசிறி உடுகம்பொல மீது தனியான விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இவ் இராணுவக் களஞ்சியம் மீதான சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்ட 3 இராணுவ வீரர்கள் ஏற்கனவே சேவையில்இருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே.

(தி-61)

# தேசவழமை

வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
**சி.பத்மநாதன்**
பேராதனைப் பல்கலைக்கழகம்.

27

## முதலாம் பகுதி

## தேசவழமைச் சட்டம்

## யாழ்ப்பாண இராச்சியம்

வன்னிப்பற்றுகள் சுயாட்சி அமைப்புக்களாய் விளங்கின. வன்னிபங்கள் தங்கள் ஆட்சியின் கீழமைந்த குடியானவர்கள் மீதும் நிலங்கள் மீதும் மன்னன் ஒருவனுக்குரிய உரிமைகளையும் அதிகாரங்களையும் பெற்றிருந்தனர். தத்தம் பகுதிகளிலே குடியானவர்கள் செலுத்தவேண்டிய எல்லா இறைகடைமைகளையுஞ் சேவைகளையும் அவர்களே பெற்றுக் கொண்டனர். அவர்களின் பரிபாலன முறையும் யாழ்ப்பாணத்து மன்னர்களின் பரிபாலன முறையினைப் பெரிதும் ஒத்திருந்தது. அவற்றிலுள்ள பிரதேசவாரியான நிர்வாகப் பிரிவுகளினது பெயர்களும் நிர்வாகப் பதவிப் பெயர்களும் ஒரேவிதமானவை. அவற்றிலுள்ள பதவிகளுக்குரிய நியமனங்களை வன்னிபங்களே வழங்கினார்கள். பொது நிர்வாகம், இறைவரி நிர்வாகம் நீதி பரிபாலனம் ஆகிய துறைகளில் எதுவிதமான கட்டுப்பாடுகளுமின்றி அவர்கள் சுயாட்சி அதிகாரங்களைக் கொண்டிருந்தனர். யாழ்ப்பாணத்து இராசதானியில் வரிசை கூடுஞ் சமயத்திலே வன்னிபங்கள் அதிலே கலந்துகொள்வது வழமை. ஆண்டுதோறும் வரிசை இரு சமயங்களிற் கூடுவது வழக்கம். வன்னிப் பிராந்தியம் தூரத்தில் அமைந்திருந்த படியால் வன்னியர் வருடமொன்றுக்கு ஒருமுறை மட்டுமே இராசதானிக்குச் சென்று மன்னனுக்குத் திறைசெலுத்தி, தங்கள் சினேகபூர்வமான மனப் பாங்கினையும் விசுவாசத்தினையும் உறுதிப்படுத்துவதோடு தேசத்து விவகாரங்களைப் பற்றி ஆலோசனை கூறவேண்டும் என்பது நியதி.

வன்னிபங்கள் செலுத்திய அதிகாரம் அரசரின் அதிகாரங்களைப் போன்றவை. அரசருக்குச் சமமான வரிசைகளையும் உரிமைகளையும் அவர்கள் கொண்டிருந்தனர். இராசதானிக்குப் போகும் சமயத்திலே அவர்களை நிலபாவாடை, வாத்தியங்கள் சகிதமாக வரவேற்பதுண்டு. பிற்காலத்திலே இந்த வழமைகளை உலாந்தாக்காரர் புரிந்து கொள்ளாதமையினால் இருசாராருக்குமிடையிலே கசப்புணர்வுகளும் பகைமையும் ஏற்படலாயின. வன்னிபங்கள் அரசருக்கு நிகரானவராயினும் அவர்கள் முடிசூடும் வழக்கமில்லை. நாணயங்கள் அவர்கள் வெளியிட்டதாகவும் வரலாறு இல்லை. இவ்விரு உரிமைகளும் மன்னருக்குத் தனிச் சிறப்பானவை.

பதவி நியமனங்கள் யாவும் வன்னியனாரால் வழங்கப்பட்டன என்பதற்கு நல்ல மாப்பாண வன்னியனாரின் நியமனப் பத்திரம் சான்றாயுள்ளது. அதன் முற்பகுதி மேல்வருமாறு உள்ளது.

"1781 ஆம் ஆண்டு சித்திரை மாதம் 8 ஆம் திகதி பனைங்காமப் பற்று அயுதாந்தி வன்னிபம் தொஞ்சுவாங் குலசேகர நல்லமாப்பாண வன்னியனார் அவர்கள் கற்பித்த படியாவது (:) பனைங்காமப் பற்றுக்குச் சேர்ந்த விளாங்குளம் சாதி வெள்ளாளன் ஆள்வயினார் கந்த உடையான் வந்து கிழக்கு மூலைக்குத் தொழிலும் முதலியாரென்கிற பட்டப் பேருங்கிடைக்கவேணுமென்று மிகுந்த எளிதாவுடனே மன்றாடிக் கேட்டபடியால் நாமுஞ் சம்மதித்துச் சொல்லப்பட்ட கந்த உடையானுக்கு திசைவிளங்கு நாயக முதலியென்கிற பட்டமுங் கட்டிக் கிழக்கு மூலைப் பிரிவுக்குத் தொழிலுங் கற்பித்திருக்கிறபடியால்..."

கிழக்கு மூலையிலுள்ள விளாங்குளத்தைச் சேர்ந்த கந்த உடையான் வேண்டிக் கொண்டதன் பிரகாரமாக அவனை முதலியாராக வன்னியனார் நியமித்தார். முதலியார் என்ற பதவிக்குரிய பட்டப் பேரும் அதற்குரிய அதிகாரமும் நியமனப் பத்திரம் மூலமாக வழங்கப்பட்டன. முதலியாரின் அதிகாரம் பிரதேச அடிப்படையில் அமைந்தவொன்றாகும். கந்த உடையான் பெற்றுக் கொண்ட பதவியும் அதிகாரமுங் கிழக்கு மூலைக்கு மட்டும் உரியவை. அவனுடைய பட்டமும் அதிகாரமும் வன்னிபம் மூலமாகவே கிடைத்தவை. எனவே, இத்தகைய பதவியொன்றிலிருந்து ஒருவரை நீக்கும் அதிகர்ரமும் வன்னிபத்துக்கு உண்டு என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

### வரிசை

இராச்சியம் முழுவதிலும் நிர்வாகப் பதவிகளைப் பெற்றிருந்த தலைமைக்காரர் வருடந்தோறும் இருமுறை இராசதானியிற் கூடுவது வழமை. வன்னிகளைப் பொறுத்தவரையில் வன்னிபங்கள் மட்டும் அவ்வாறு செல்லுதல் வேண்டும். அவர்களின் பற்றுகளில் உள்ள நிர்வாக அதிகாரங்கள் இராசதானிக்குப் போகவேண்டும் என்ற நியதியில்லை. வன்னிபங்களும் வருடத்தில் ஒருதடவை மட்டும் போய், திறைசெலுத்தி விசுவாசத்தை சம்பிரதாயபூர்வமாக உறுதிப்படுத்த வேண்டும். மற்றைய பிரதேசங்களைப் பொறுத்த வரையிலே தலைமைக்காரர் எல்லோரும் அரச சபையின் கூட்டத்திற் பிரசன்னமாயிருத்தல் வேண்டும். இவ்வாறு வருடமொன்றுக்கு இருதடவைகளிற் கூடுங் கூட்டங்களை வரிசை என்று சொன்னார்கள்.

தமிழரசரின் காலம் முடிந்த பின்பு போர்த்துக்கேயரும் உலாந்தாக்காரரும் இந்த வழக்கத்தைப் பின்பற்றினார்கள். உலாந்தாக்கார அதிகாரிகளின் அறிக்கைகளிலே இதனைப்பற்றி மேல்வருமாறு வர்ணித்துள்ளனர்.

"முதலியார்களும் எல்லாச் சாதியார்களின் தலைமைக்காரரும் ஒவ்வொரு வருடமும் இருதடவைகள் இங்கு வந்து, செய்ய வேண்டிய கருமங்களைப் பற்றி ஆட்சியாளருக்கு ஆலோசனை கூற வேண்டும். ஒவ்வொருவரும் ஏதாவதொன்றை உபகாரமாகக் கொண்டு வரவேண்டும். தலையாரிகள் கோழிகளைக்கொண்டு வருகின்றனர். ஒவ்வொரு சாதியாரும் தந்தந் தொழிலுக்கு அடையாளமான பொருட்களைக் கொண்டு வருவார்கள். வன்னி நாட்டில் உள்ளவர்கள் வருடத்துக்கு ஒருமுறை இங்கு வரவேண்டும். ஆனால், நெய், கோழிகள் முதலானவற்றை வருடத்துக்கு இருமுறை அனுப்பிவைத்தல் வேண்டும். பல்லவராயன் கட்டு, பொன்னேரி, இலுப்பைக் கடவை ஆகியவற்றைப் பொறுத்தவரையிலும் இதுவே வழமையாகும். இந்த வழக்கத்தைத் தொடர்ந்தும் பின்பற்றவேண்டும். அவர்களுடைய அடக்கத்திற்கு அது ஓர் அடையாளமாகும். அந்த வழக்கம் முற்காலத்தில் இங்கிருந்த அரசர்களாலே ஆரம்பிக்கப்பட்டது. போர்த்துக்கேயர் அதைப் பின்பற்றினார்கள். இப்பொழுதும் அது உத்தம கொம்பஞ்ஞீயவினாலே அனுசரிக்கப்படுகின்றது."

(தொடரும்)

**வலம்புரியின் அனுசரணையுடன்**
வட்டுக்கோட்டை-சங்கரத்தை
பாலன் மில் உரிமையாளர்
**இராசையா சோமசுந்தரம்**
அவர்களின் ஞாபகார்த்தமாக நடாத்தப்படும்

**கவிதைப் போட்டி -2004**

1ம் பரிசு தங்கப் பதக்கம்
2ம் பரிசு வெள்ளிப் பதக்கம்
3ம் பரிசு வெண்கலப் பதக்கம்
இவை தவிர மேலும் பல ஆறுதல் பரிசுகள்

விடயம்
**"தமிழா உனக்கேன் இக்கதி"**

விதிகள்
- போட்டியாளர் ஒரு கவிதை மட்டுமே போட்டிக்கு அனுப்ப முடியும்.
- விடயத்தில் தரப்பட்ட தலைப்பை பிரதிபலிப்பதாக கவிதைகள் அமைய வேண்டும். (கவிதைக்குள் விடயத் தலைப்புவரி இடம்பெற வேண்டும் என்பது அவசியமில்லை)
- போட்டிக்கவிதை மரபுக் கவிதையாகவோ அன்றி புதுக் கவிதையாகவோ அமையலாம்.
- மரபுக் கவிதையாயின் 12 வரிகளை மட்டும் கொண்டதாகவும் புதுக்கவிதையாயின் 12 தொடக்கம் 16 வரிகளுக்கு உட்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.
- கவிதைகள் யாவும் சொந்த ஆக்கமாக இருப்பதுடன், தெளிவாக எழுதப்பட வேண்டும்.
- கவிதை எழுதப்பட்ட தாளில் போட்டியாளர் தனது பெயரை எழுதுவது தவிர்க்கப்பட வேண்டும்.
- வயதெல்லை வரையறுக்கப்படவில்லை
- கவிதைப் போட்டியில் பங்குபற்றுபவர்கள் வலம்புரியில் வெளிவரும் கூப்பனையும் உறுதியுரையையும் நிரப்பி கவிதையுடன் இணைத்து அனுப்புதல் அவசியமாகும்.

**உங்கள் கவிதைகளை**
**கவிதைப்போட்டி-2004**
**வலம்புரி**
இல-15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 31.01.2004ற்கும் பிந்தாமல் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.

★ பரிசுக்கான கவிதைகள் நடுவர் குழுவால் தெரிவு செய்யப்படும்.

இங்கே வெட்டி கவிதையுடன் இணைத்து அனுப்புக.

**இராசையா சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப்போட்டி- 2004 விண்ணப்பம்**

அலுவலகப்பாவனைக்கு

முழுப்பெயர்.........................
.........................
தபால் முகவரி.........................
.........................
பிறந்த திகதி.........................
தே.அ.அ. இல .........................
மாணவராயின்/பாடசாலையின் பெயரைக் குறிப்பிடவும்.

.......... ..........
திகதி போட்டியாளர் கையொப்பம்

உறுதியுரை
இத்துடன் அனுப்பப்படுகின்ற கவிதை எனது சொந்த ஆக்கம் என்றும் வேறு எந்தக்கவிதைகளின் தழுவலும் அல்ல என்றும். இப்போட்டிக்கு ஒரு கவிதையை மட்டுமே அனுப்பிவைக்கிறேன் என்றும் இத்தால் சத்தியம் செய்கிறேன்.

.......... ..........
திகதி போட்டியாளர்கையொப்பம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்.
-குறள்

# வலம்புரி

## மிலேனியம் சிற்றிக்கு பதவி பறிப்பாயின்...

மிலேனியம் சிற்றி இராணுவ ஆயுதக்களஞ்சியம் மீது மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை பற்றிய தகவல்களை வெளியிட்ட இராணுவ உயர் அதிகாரிகள் மூவர் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில்ஹேரத் அறிவித்துள்ளார்.

மிலேனியம் விவகாரத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா நேரடியாகத் தலையிட்டு விடயத்துக்குப் பொறுப்பான இராணுவ அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுப்பதில் மிகத் தீவிரமாக ஈடுபட்டு இருந்தார். அதன் விளைவாக உரியவர்கள் இனம் காணப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

ஒரு நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் அவரின் நடவடிக்கை ஏற்புடையதென ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் ஒரு நாட்டின் தலைவி என்ற ஆசனத்தில் இருப்பவர் நாட்டு மக்கள் அனைவரையும் சமகண்கொண்டு நோக்குதல் இன்றியமையாததாகும். அவ்வாறாயின் இலங்கை இராணுவம், தமிழர்களின் தாயகத்தில் நடத்திய கொலைகள், சொத்தழிப்புகள், பாலியல் வல்லுறவுகள் போன்றவற்றுக்கு வழங்கப்படவேண்டிய தண்டனைகள் தாராளமாக உண்டு. எனினும் அது விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஏதேனும் நடவடிக்கை எடுத்தாரா எனில், இல்லை என்ற பதிலே விடையாகக் கிடைக்கும்.

இலங்கைத் தீவு முழுமையையும் ஆளவேண்டும் என விரும்புகின்ற தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தமிழர்களை அடிமையாக நடத்த விரும்புவதையே மேற்கூறப்பட்ட நிகழ்வுகள் தெட்டத் தெளிவாக்கியுள்ளன.

மிலேனியம் சிற்றி விவகாரத்தில் அதிரடியாக நடவடிக்கை எடுத்த ஜனாதிபதிக்கு நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல், 1996 ஆம் ஆண்டுகளில் யாழ். குடாநாட்டில் படையினரால் கைதாகிக் காணாமல் போனோர் மற்றும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பேரில் தமிழர்களின் குடியிருப்பு பறிமுதல், இப்படி எத்தனையோ அழிவு நடவடிக்கைகளை மேற்கொண்ட இராணுவத்தின் மீது சட்ட நடிவடிக்கை எடுத்து அவர்களுக்குத் தண்டனை வழங்க ஜனாதிபதி தவறிவிட்டமை அவரின் பக்கச் சார்பான ஆட்சி முறைக்குச் சான்றாகும்.

1995 இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பின்போது, இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் 1996களில் யாழ்ப்பாணத்திற்கு திரும்பியபோது அப்பாவி இளைஞர்கள் பலர் படையினரால் கைதுசெய்யப்பட்டனர். ஆனால்

## இலங்கையின் இன்றைய நிலைவரம் தொடர்பில்
# பொதுநலவாய அமைப்பின் பிரதிநிதி
# அமைச்சர் மகேஸ்வரனுடன் சந்திப்பு

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்பின் தெற்காசியப் பிரிவின் இலங்கை விவகாரங்களுக்குப் பொறுப்பாக அண்மையில் நியதமிக்கப்பட்ட செல்வி. கத்தரின் கிளிவ் இன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின் ஒரு அங்கமாக, இந்து சமய வவகார அலுவல்கள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தியாகராஜா மகேஸ்வரனைச் சந்தித்து இலங்கையின் இன்றைய அரசியல் நிலைமைகள் பற்றி அறிந்து கொள்ளவுள்ளார்.

மேற்படி சந்திப்பு இன்று செவ்வாய்க்கிழமை மு.ப. 10.15 மணிக்கு இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சின் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

செல்வி கத்தரின் கிளிவ்வுடன் இலங்கைக்கான பிரித்தானியத் தூதுவர் ஸ்டிபன் ஈவான்ஸ்ஸும் இதில் பங்கேற்கவுள்ளார்.

இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவரும் அண்மையில் அமைச்சர் மகேஸ்வரனைச் சந்தித்து தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து கலந்துரையாடியிருந்தமை தெரிந்ததே. (உ)

## கட்சிகளை ஒன்றுபடுமாறு வசீர் சேகுதாவுத் வேண்டுகோள்

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் அரசியல் கட்சிகளும், தனிப்பட்ட அரசியல் வாதிகளும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிழ் கூட்டு முன்னணி அமைத்து முஸ்லிம் மக்களின் அரசியல் பலத்தைக் காப்பாற்ற முன்வரவேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தவிசாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான வசீர் சேகுதாவுத் கேட்டுக் கொண்டுள்ளார்.

ஏறாவூர் ஐயங்கேணி கிராமத்தில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற பொதுநூலகத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

அங்கு தொடர்ந்து பேசிய அவர், இலங்கை முஸ்லிம் மக்களுக்கு உள்ள ஒரே ஒரு பலமான அரசியலில் பேரம் பேசும் பலத்தை அவர்கள் தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்ளவேண்டும். இதற்கு அரசியல் ரீதியான விழிப்புணர்வு முஸ்லிம் மக்கள் மத்தியில் உள்ளதா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

தனிப்பட்ட அரசியல் நலன்களுக்காக முஸலிம் அரசியல் கட்சிகள் பிரிந்து செயற்படுவதால் முஸ்லிம் சமூகம் சின்னாபின்னமாக்கப்பட்டு அவர்களின் எதிர்கால அரசியலும பாதிக்கப்படக் கூடியநிலை ஏற்பட்டுள்ளது என்றார். (தி-61)

## போரைத் தவிர்க்கும் பொறுப்பு
## தலைமைகளுக்கே உரியது
## ரிச்சர்ட் பதிரன தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவும் அரசியல் நெருக்கடிகளுக்குத் தீர்வு காண்பதற்கு, பிரதான இரு அரசியல் தலைவர்களும் ஒன்றிணைதல் அவசியம் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரிச்சர்ட் பதிரன தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய ரிச்சர்ட் பதிரன,

இலங்கை அரசியல் அமைப்பின்படி அரசாங்கத்தின் நெருக்கடி நிலமையைத் தீர்ப்பதாயின் பாராளுமன்றில் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருத்தல் அவசியம். ஆனால், இது தற்போது இல்லை.

எனவே, இதற்குத் தீர்வுகண்டு அரசு தன்னாட்சியை நிலை நிறுத்த வேண்டுமானால் ஜனாதிபதியும் பிரதமரும் தமக்குள்ளே நிலவிவரும் கருத்து முரண்பாடுகளைக் களை

## வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 7.44 மணிக்கு நடைபெறவுள்ளது.

(பிரதிஷ்டா பிரதமகுரு) சிவாகம காலாநிதி சிவஸ்ரீ வை.மு பரமசாமி குருக்கள் இதற்குத் தலைமை தாங்கவுள்ளார்.

இதற்கான கர்மாரம்பம் கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. பக்தர்களின் எண்ணெய்க் காப்பு எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக் கிழமை இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக தினத்தன்று யாழ்.பக்தர்களின் நலன் கருதி காரைநகர் சிற்றூர்திச் சங்கம் இலவச பஸ் சேவையை நடாத்தவுள்ளது.

அதிகாலை 4.00 மணி முதல் யாழ்.பஸ் நிலையத்தில் இருந்து 15 நிமிடத்துக்கு ஒரு முறை இச் சேவை இடம் பெறும் என்றும் பின்னர் பி.ப. 2.00 மணிமுதல் வாரிவளவு கற்பகவிநாயகர் ஆலயத்தில் இருந்து யாழ் நோக்கிய விஷேட பஸ் சேவை நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அன்றைய தினம் நண்பகல் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேக தினத்தன்று மாலை 5.00 மணியளவில் விநாயகப்பெருமானுக்கு விஷேட பூசை, பஞ்சமுக அர்ச்சனை, திருவூஞ்சல் ஆகியன இடம்பெற்று விஷேட மேளக்கச்சேரியுடன் வி நாயகப்பெருமான் வீதியுலா இடம்பெறவுள்ளது. (உ-246)

## இராணுவத்தின் பிரச்சினைகளை தீர்த்து வைக்கக் கோரிக்கை

இராணுவம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் பிரச்சினைகள் உடனடியாகத் தீர்த்து வைக்கப்படவேண்டுமெனப் பாராளுமன்ற உறுப்பினர் அனுரா பண்டாரநாயக்க அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

இவ்விரு சாராருக்கும் இடையே பதவி உயர்வு, சம்பளமுரண்பாடு, இடமாற்றம் மற்றும் தொழில் ரீதியான பிரச்சினைகள் போன்றன நீண்டகாலமாகத் தீர்க்கப்படாத நிலையில் உள்ளன.

இப்பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் இப் பிரச்சினைகள் நாட்டின் பாதுகாப்புக்கே அச்சுறுத்தலாக அமைந்துவிடும்.

அத்துடன்,இராணுவம் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் ஏனைய அரச ஊழியர்களுக்கும் சம்பள உயர்வு போன்ற ஆயிரத்து 150 ரூபா கொடுப்பனவினை அரசு வழங்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார். (தி-61)

## உள்ளூராட்சிக் கொடுப்பனவை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

உளளூராட்சி மன்றங்களினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக்அலுவிகார தீர்மானிததுளளார்.

கைகளை [illegible] நடிவடிக்கை எடுத்து அவர்களுக்குத் தண்டனை வழங்க ஜனாதிபதி தவறிவிட்டமை அவரின் பக்கச் சார்பான ஆட்சி முறைக்குச் சான்றாகும்.

1995 இல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பின்போது, இடம்பெயர்ந்த மக்கள் மீண்டும் 1996களில் யாழ்ப்பாணத்திற்கு திரும்பியபோது அப்பாவி இளைஞர்கள் பலர் படையினரால் கைதுசெய்யப்பட்டனர். ஆனால் இன்றுவரை அவர்களின் முடிபு எதுவுமே தெரியவில்லை.

தங்களின் பிள்ளைகள், குடும்பத் தலைவர்கள் திரும்பவும் வருவார்கள் என்ற ஆவலோடு வழிமேல் விழி வைத்துக் காத்திருக்கும் உறவுகளின் நிலை மிகவும் பரிதாபமானது.

படையினரால் கைதாகிக் காணாமல் போன தங்கள் உறவுகளை மீட்டுத் தாருங்கள் எனக் கையேந்தியும் எந்த நடவடிக்கையும் இதுவரை சிங்கள ஆட்சிகளால் எடுக்கப்படவில்லை. காணாமல் போனோரின் பெற்றோர் பாதுகாவலர் சங்கம், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை சந்தித்து எங்களின் உறவுகளை மீட்டுத்தாருங்கள் என மன்றாடினார்கள்.

ஆனால் ஜனாதிபதி இரங்கவில்லை. கைதாகிக் காணாமல் போனவர்கள் எங்கே என்பதை கண்டறிய முடியாமல் ஜனாதிபதி இருக்கிறார் எனில் அதற்குக் காரணம் அவ்வாறு காணாமல் போனவர்களைக் கண்டறிய முற்பட்டால் அதனால் இராணுவ அதிகாரிகள் பலர் தண்டனை பெறவேண்டிய நிலைமை ஏற்படும் என்பதனாலாகும்.

தமிழர்களை ஆட்குறைப்புச் செய்த இராணுவ அதிகாரிகள் தண்டனை பெறுவதை ஜனாதிபதி விரும்பவில்லை. இதன் காரணமாகவே எட்டு வருடங்கள் கடந்த நிலையிலும் தமிழர்களின் பரிதாபம் தொடர்கின்றது. எப்படி இருக்கின்றது ஜனாதிபதியின் நீதிநெறி ?.

கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் உரையாற்றிய ரிச்சர்ட் பதிரன,

இலங்கை அரசியல் அமைப்பின்படி அரசாங்கத்தின் நெருக்கடி நிலமையைத் தீர்ப்பதாயின் பாராளுமன்றில் அரசாங்கத்திற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருத்தல் அவசியம். ஆனால், இது தற்போது இல்லை.

எனவே, இதற்குத் தீர்வுகண்டு அரசு தன்னாட்சியை நிலை நிறுத்த வேண்டுமானால் ஜனாதிபதியும் பிரதமரும் தமக்குள்ளே நிலவிவரும் கருத்து முரண்பாடுகளைக் களைந்து விட்டுக்கொடுப்புடனும் புரிந்துணர்வுடனும் செயற்பட வேண்டும்.

அதுமட்டுமன்றி, அரசு சமாதான முயற்சிகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு ஜனாதிபதி தடையாக இருக்கக் கூடாது.

நாட்டின் முக்கிய பிரச்சினையாக இருக்கும் இனப்பிரச்சினைக்கு உரிய முறையில் தீர்வுகாணப்படாத விடத்து மீண்டுமோர் யுத்தம் ஏற்படும் என்பதை ஜனாதிபதியும், பிரதமரும் நன்கு உணர்ந்து கொண்டு செயற்படவேண்டும் என்று தெரிவித்துள்ளார். (உ-4,60,10)

## திநசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

அன்புதான் வாழ்க்கையாகும். வெறுத்து ஒதுக்குவதை மரணம் என்று தான் கூறவேண்டும்.

ஆன்மீக இலட்சியத்தைப் புறக்கணித்துவிட்டு மேலை நாட்டு நாகரிகத்தின் பின்னால் நீ செல்வாயானால் அதன் விளைவாக மூன்றே தலை முறைகளில் உனது இனம் அழிந்து போய்விடும்.

**சுவாமி விவேகானந்தர்**

வழங்கவேண்டும் எனவும் [illegible]

## உள்ளூராட்சிக் கொடுப்பனவை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களினைப் பிரதிநிதித்துவப் படுத்தும் உறுப்பினர்களுக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்க உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலுக்அலுவிகார தீர்மானிததுளளார்.

தற்போது உள்ளூராட்சி மன்ற உறுப்பினர் ஒருவருக்கு 3 ஆயிரத்து 90 ரூபா மட்டுமே மாதாந்தக் கொடுப்பனவாக வழங்கப்பட்டு வருகிறது. இதனை மேலும் ஆயிரத்து 500 ரூபாவால் அதிகரிக்க அமைச்சர் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சரவையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்படவுள்ளது.

இவ்வாறான கொடுப்பனவுகள் மூலம் உள்ளூராட்சி உறுப்பினர்கள் தமது கடமைகளைச் சரிவரச் செய்வார்கள் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (தி-4)

## நாய்க் கடிக்கு இலக்கான 7 பேர் கடந்த ஆண்டு மரணம்

(சுதுமலை)

நாய்க் கடிக்குச் சரியான சிகிச்சை பெறாத காரணத்தினால், கடந்த வருடத்தில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 7 பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரத் திணைக்கள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் 7 பேரில், கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 4 பேரும் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த 2 பேரும் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த ஒருவரும் அடங்குகின்றனர்.

இதேவேளை, நாய்க்கடிக்கு இலக்காகி கிராமிய வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றவர்களின் எண்ணிக்கை கடந்த 2002 ஆம் ஆண்டை விட, 2003 இல் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-252)

## பெருமெடுப்பில் படைப் பயிற்சி

ஆனைக்கோட்டை கூழாவடி இராணுவ முகாமில் படையினர் பெருமெடுப்பில் பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மாலை வேளைகளில் இடம் பெற்றுவரும் இப் பயிற்சி நடவடிக்கைகள் மக்கள் மத்தியில் போர் குறித்த அச்சத்தை ஏற்படுத்தி வருவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-102)

## அதிகார இழுபறிக்கு...

முயற்சியில் மனோ தித்தவெல, மலிக்சமர விக்கிரம குழுவினர் தொடர்ந்து ஈடுபட்டுவருவதை அடுத்து இருவருக்குமிடையில் இணக்கம் ஏற்படக் கூடிய நம்பிக்கை பிரகாசமாகவுள்ளது.

அரசாங்கம் முன்னெடுத்து வந்த சமாதான முயற்சிகளின் முன்னேற்றம் சர்வதேச நாடுகளின் நிதியுதவிக்கு உத்வேகம் அளிக்கக் கூடியதாக இருக்கும். யப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி இலங்கைக்குப் பாரிய நிதியுதவி தேவையாக இருப்பதாக சர்வதேச சமூகத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதுடன், சர்வதேசத்தின் உதவி கிடைக்க வேண்டுமானால் சமாதான முயற்சிகள் தொடர வேண்டும் என்று வலியுறுத்திக் கூறியுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் (ஜே.வி.பி)இடையில் ஏற்பட்டுள்ள கூட்டு முன்னணி தொடர்பாக பல பிரச்சினைகள் உருவாக வாய்ப்புக்கள் உண்டு. இந்த கூட்டணி உடன்படிக் கையில் வடக்குக் கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகமானது "ஈழராச்சியத்திற்கான" அடித்தளமாக இருக்கும் என்று கூறப்பட்டுள்ளது என்று கூறிய அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், ஜனாதிபதியும், பிரதமரும் தமக்கிடையிலான அதிகார இழுபறி நிலையை முடிபுக்குக் கொண்டு வருவதற்கு தமக்குள்ளேயே முயற்சித்து வருகிறார்கள் என்று தெரிவித்தார். (ம)

## வட-கிழக்கு மக்களுக்கு...

நிதிகளைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் என்பது மக்களுக்கு ஆகக் கூடுதலான சேவையை வழங்கும் முகமாக அரச நிர்வாகத்தை மேலும் திறமையாகச் செயற்படுத்துவதற்கு ஏற்படுத்தப்படுவதாகும்.

இலங்கையில் இத்தகைய திட்டங்கள் ஏற்கனவே அமுலில் இருந்திருக்கின்றன. கிராமசபைத் திட்டம் அத்தகைய திட்டங்களில் ஒன்றாகும்.

சுதந்திரம் பெறுவதற்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் காலஞ்சென்ற எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா கிராமங்களின் முன்னேற்றத்திற்கு கிராம சபை அமைப்பைப் பயன்படுத்தியிருந்தார். ஆனால் 77ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இத்தகைய உள்ளூராட்சி நிர்வாகத்தை நீக்கியது.

பல்லின சமூகம் கொண்ட இலங்கைபோன்ற நாடுகளில் தமது தனித்துவத்தை மக்கள் பேணுவதற்கு அதிகாரப் பரவலாக்கல் உதவுகின்றது.

தற்போதைய மாகாண சபை அமைப்பு, அரசாங்க அதிகாரம் பரவலாக்கப்படுவதற்கு சிறந்த அமைப்பாக இருக்கின்றது. தேசிய அபிவிருத்தியை அரசியல்வாதிகள் சீர்குலைப்பதை முடிபுக்குக் கொண்டுவர வேண்டும். இதனை அடைந்து கொள்வதற்கு எதிர்வரும் தேர்தலில் நேர்மையான புத்திசாதுரியமுள்ள தலைவர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டுமென்று ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (து)


நியூ சிற்றி ரேடேர்ஸ்

சகல விதமான T.V களுக்கு சிறந்த முறையில் அன்ரனா பொருத்திக் கொள்ளவும், திருத்திக் கொள்ளவும் அன்ரனா, பூஸ்ரர், வயர், பைப் செற் அன்ரனா உதிரிப் பாகங்கள் பெற்றுக் கொள்ளவும் நாட வேண்டிய ஒரே இடம்

நியூ சிற்றி ரேடேர்ஸ்
135 கஸ்தூரியார் வீதி
(குளத்திற்கு முன்பாக)
யாழ்ப்பாணம்
தொலைபேசி எண்: 222-3226
(சி-7310)


## அரசியல்....

கிறது.

இப்பதவியை வகிப்பது தொடர்பில் தீர்க்கமான முடிபுகள் எட்டப்படும் வரை யாப்பு வரையறையில் இழுபறி தொடருமென எதிர்பார்க்கப்படுகிறது. (உ-4)


THE ROYAL COLLEGE OF JAFFNA

ஆண்டு 1ல் இருந்து11 வரை எல்லாப் பாடங்களும். SPOKEN-ENGLISH, GRAMMAR மேற்படிப்புவரை பதிவுக்கு:
தலைமை ஆசிரியர்
426(302) K.K.S. வீதி
யாழ்ப்பாணம் (8224)


## இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலியைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர் நேற்று முன்தினம் மாலை கிணற்றில் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டார்.

எஸ்.சசிரேகா (வயது 24) என்ற பெண்னே தற்கொலை செய்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ)

## நேற்று..

எஞ்சிய நிலுவை 2வருடாந்த தவணைகளிலும் கொடுக்கப்படுமென உபகுழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

எனவே இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. எமது கோரிக்கைகளும் சரியான முறையில் நிறைவேற்றப்படும் வரை உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்றார். (ந-60,10)

## விளக்கமளிக்குமாறு...

இதேவேளை ஜனாதிபதியின் பதவிக்காலம் தொடர்பாக அரசாங்கத்துக்கும், எதிர்க்கட்சிகளுக்குமிடையில் பலத்த கருத்து முரண்பாடுகள் நிலவி வருகின்றன.

இந்நிலையில் மேற்படி விடயம் சம்பந்தமாக பாராளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு, தாம் ஆராய்ந்து பதில் தருவதாக சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்திருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கு)

## உடற்கல்வியியல் டிப்ளோமாதாரிகளுக்கு

(யாழ்ப்பாணம்)

உடற்கல்வி ஆசிரிய ஆட்சேர்ப்புக்கான விண்ணப்பப்படிவங்களைப் பூர்த்தி செய்வது தொடர்பான கலந்துரையாடல் இன்று நண்பகல் 12 மணிக்கு நீராவியடி பிறைற்மன் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

உடற்கல்வி டிப்ளோமா பட்டம் பெற்ற அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கத் தலைவர் ப.தர்மகுமாரன் கேட்டுள்ளார். (ச)

## பெற்றோல் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோலின்விலை நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் 2ரூபாவால் உயர்த்தப்பட்டுள்ளது.

ஆனால் ஏனைய எரிபொருள்களின் விலைகளில் மாற்றங்கள் செய்யப்படவில்லை என இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது. (தி-60)

## இனங்களின்...

என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகும்.

இலங்கையில் பெரும்பான்மை இனத்தவர்களும், சிறுபான்மை இனத்தவர்களும் ஒற்றுமையுடன் செயற்படுவதன் மூலமே இறைமையைப் பாதுகாக்க முடியும். இரு சமூகங்களும் ஒற்றுமையுடன் செயற்படுவதுடன் நாட்டின் இறைமை மட்டுமன்றி இனப்பிரச்சினைக்கும் தீர்வுகாண முடியும் என்றார். (தி-61)


ஸ்ரீ முருகன் ஸ்தாபனத்தாரின் மற்றுமோர் சேவை
வெளிநாடுகளில் இருந்து உறவுகளிடமிருந்து
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் பணப் பரிமாற்றம்
மூலம்
சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க
எம்மிடம் நாடுங்கள்
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
303 K.K.S. வீதி, யாழ்ப்பாணம்
T.P : 021 222 5392
Fax : 222 3214
E.mail : smskr@eureka.lk
சிவன் கோவில் வீதி, காரைநகர்
T.P : 0602212472


## புதுமுக மாணவர்களுக்கு வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2003/2004ஆம் கல்வியாண்டில் கலைப்பீடத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டு பதிவினை மேற்கொண்ட புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள் நாளை புதன் கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஆரம்பமாகவுள்ளன

தமிழ்த்துறைத் தலைவரும், கலைப்பீட பதில் பீடாதிபதியுமான பேராசிரியர் சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் யாழ்பல்கலைக் கழக துணைவேந்தர் சிரேஷ்ட மாணவ ஆலோசகர், பதிவாளர் மற்றும் நூலகர், மாணவர் அமைப்புத் தலைவர்கள் ஆகியோர் கருத்துரைகள் வழங்கவுள்ளனர்.

புதுமுக மாணவர்கள் அனைவரும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ள அதேநேரம் இவ் வழிகாட்டல் கருத்தரங்குகள் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 6ஆம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ந-18)


சங்குநாதம்
அகாஷியின் முயற்சி வெற்றி தருமா? டொறிங்டன்
யாழ்ப்பாணத்தில் நடிகர் மணிவண்ணன் சதீபன்
கணவனைக் கொன்றவர்களுடன் கூட்டு விதுரன்
நாட்டில் சண்டையா? சமாதானமா? முடிவு சிங்களமக்களிடம் விஜயன்
ஆலடி மாநாடு
வியாசரின் பதில்கள்
கே.வி.குணசேகரம் எழுதும் கல்தூண்கள்...(தொடர்கதை)
மற்றும் பல அம்சங்களுடன் வாசிக்கத் தவறாதீர்கள்




திங்கள் வைகறையில் உங்கள் உள்ளங்களில் ஒலிப்பது
சங்குநாதம்
விலை ரூபா. 16.00



யாழ். மண்ணில் முதன் முதலாக
மாபெரும் அழகுக் கலைக் கண்காட்சி

பொஸ் அழகுக்கலை நிறுவனத்தின் வழிகாட்டலில் மாணவர்களின் மாபெரும் அழகுக் கலைக் கண்காட்சி நடைபெறுகிறது.

காலம்: 01-02-2004 ஞாயிற்றுக்கிழமை
இடம்: யாழ் மத்திய கல்லூரி
நேரம்: காலை 10.00 மணி முதல்

இக் கண்காட்சியில் மட்பானை அலங்காரம, கிரிஸ்டல் உபகரணம் ஆக்கல், பப்ரிக் பெயின்டிங், கிளாஸ் பெயின்டிங், சாறி வேலைப்பாடு, மலர் அலங்காரங்கள், மீன்செதில் கைவேலை, முத்து மாலை செய்தல் இன்னும் பல கைவேலை வண்ணங்கள் காட்சிக்கு வைக்கப்படும்.

அன்று மாலை 3.00 மணிக்கு யாழ். மக்கள் வியக்கும் வகையில் வர்ண மின் ஒளியில் இந்து, கிறிஸ்தவ, பௌத்த, குஜராத்தி மணப்பெண்கள் அலங்காரத்துடன் தமது மதத்திற்கு ஏற்றபடி உலாவரும் காட்சியும் நடைபெறும்.

"காணத் தவறாதீர்கள்"

பிரவேசம் ரூ. 20/= மட்டுமே

நிறுவனத்தின் மாணவர்கள்

விளம்பர அனுசரணை:
போட்டோஷீ
கே.கே.எஸ்.வீதி,
தாவடிச்சந்தி,
தாவடி.
[C/7312]





MITSUI CEMENT HINODE CEMENT


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.01.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.